வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.03.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 86 | பக்கங்கள் : 16

# பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்!

## மனித உரிமைகள் பேரவைக்கு 6 தமிழ் தேசிய கட்சிகள் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

**“தமிழ்மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களை தடுப்பதற்கு பொதுஜன வாக் கெடுப்பு நடத்தப்படவேண்டும்”,என்று கோரி ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டிணைந்து ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.**

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது அமர்வு நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது.

இந்த நிலையில், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) தமிழ் தேசியக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் ஒப்பமிட்டு அனுப்பியுள்ளனர். இந்தக் கடிதத்திலேயே அவர் கள் மேற்படி விடயத்தை

15




## உள்ளூர் இழுவை படகுகளை அரசு தடை செய்யக்கூடாது!

### வடக்கு மீனவர்கள் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 01

உள்ளூர் இழுவை மடிப் படகுகளை தடை செய்யவேண்டாம் என வலியுறுத்தி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூர் இழுவை மடிப் படகுகளை கொண்டு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வட பகுதி மீனவர்களினால் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை இந்த

15

சுமந்திரன் - ஹசன் அலி பேச்சின் பின்னணியில்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முஸ்லிம்களை உள்ளீர்க்கத் திட்டம்!

மட்டக்களப்பு, மார்ச் 01

முஸ்லிம் தரப்பையும் உள்வாங்கி அடுத்த தேர்தலை சந்திப்பதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாக அந்தக் கட் சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த முயற்சியின் முக்கிய அம்சமாகவே எம். ரி. ஹசன் அலி மற்றும் பல்கலைக்கழக மற்றும் புத்திஜீவிகள் குழுவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன், த. கலையரசன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித்

15

## தொற்றுக்கு 32 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 32 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கு உட்பட்ட இரு பெண்களும்,

15

## அடையாளப்படுத்திய இடங்களில் இழுவைமடி மீன்பிடிக்கு அனுமதி!

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு, மார்ச் 01

உள்ளூர் இழுவைப் படகுகள் தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளும் வரையில் நாரா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இழுவைமடி வலைகளைப் பயன்படுத்த முடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும்

15

## மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைக்கு கூட்டமைப்பு வரவேற்பு!

கொழும்பு, மார்ச் 01

“இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிற்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.” என்று அந்தக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது. இந்த நிலையில், ஆணையாளர் மிற்செல் பச்லெட்டின் இலங்கை பற்றிய, “இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவித்தல” எனும் தலைப்பிலான

15

## தடுப்பூசி அட்டை இருந்தாலே கச்சதீவுக்கு செல்லமுடியும்

யாழ்ப்பாணம், மார்ச் 01

கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்பவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டைகள் வைத்திருக்க வேண்டியது அவசியம் எனவும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் மாத்திரம் கலந்துகொள்ளும் நிலையில் ஆலய வளாகத்தினுள் எவ்விதமான வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவ முன்னேற்பாட்டுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில்

15

## இலங்கையுடன் மிகவிரைவில் I பில்லியன் டொலர் ஒப்பந்தம்

### இந்திய அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 01

இலங்கையுடன் கைச்சாத்திடப்படவுள்ள ஒரு பில்லியன் டொலர் ஒப்பந்தத்துக்கு இந்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் இது குறித்து தகவல்களை வெளியிட்டுள்ளார். இதற்கமைய கடனை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத் திடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத சட்டத்தை நீக்க சிங்கள மக்களும் பேராதரவு!

### மட்டக்களப்பில் சுமந்திரன் எம்.பி.

மட்டக்களப்பு, மார்ச் 01

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு இன்று சிங்கள மக்களும் பெருமளவில் ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடாமல் அனைத்து இன மக்களும் இணைந்து எடுக்கும் முயற்சியாக இதனை முன் கொண்டு சென்று மக்களின் குரல்களுக்கு செவி சாய்க்கும் நிலையை ஏற் படுத்தவேண்டும்.”

-இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். நேற்று மட்டக்களப்பில் நடந்த

15

அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்கு

## புலம்பெயர் தேசங்களிலும் இங்கும் ஜனநாயக ரீதியில் போராட்டங்கள்!

### வவுனியாவில் மாவை சேனாதிராசா அறிவிப்பு



வவுனியா, மார்ச் 01

அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்க நாட்டிலும், புலம்பெயர் தேசங்களிலும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் நேற்று திங்கட்கிழமை திறந்து வைத்த பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

பயங்கரவாத தடைச் சட்டத்தை நாங்கள் இப்போது -

15

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான தொடர் பயற்சியின் இறுதி நிகழ்வு நேற்று

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கு தேவைகளை கண்டறிதல் மற்றும் வளங்களை அடையாளப்படுத்தல் பற்றிய தொடர் பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதேச சபை மற்றும் நகரசபைகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச சபை மற்றும் நகர சபைத் தவிசாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வு கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி பெண்களின் இயலுமையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், சேர்ச் போர் கொமன்ட் கிரவுன்ட் நிறுவனம், மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகியன இணைந்து இந் நிகழ்வை ஒழுங்கு அமைத்திருந்தன. (அ)

# அல்வாயில் இரு இடங்களில் இன்றிரவு சிந்துநடைக்கூத்து

வடமராட்சி, மார்ச் 01

மகா சிவராத்திரி தினமான இன்று வடமராட்சி - அல்வாயில் இரு இடங்களில் "மாலைக்கு வாதாடிய மாரியின் மைந்தன்" சிந்துநடைக்கூத்து அரங்கேற்றப்படுகின்றது.

வடமராட்சி கலை, பண்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அதன் ஸ்தாபகரான திருமதி விசிந்தன் சரண்யாவின் நெறியாள்கையில் இந்த சிந்து நடைக்கூத்து அரங்கேறவுள்ளது.

இன்றிரவு 9.30 மணிக்கு அல் வாய் - சாமணந்தறை ஆலடி பிள்ளையார் ஆலயத்திலும், தொடர்ந்து வட அல்வை குச்சம் ஞானவைரவர் ஆலயத்தில் நள்ளிரவு 12 மணிக்கும் இந்தக் கூத்து அரங்கேறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மகா சிவராத்திரி விழா!

யாழ்ப்பாணம், மார்ச் 01

கோப்பாய் தெற்கு ஸ்ரீசுப்ரமுனிய கோட்டம் ஸ்ரீசாந் திலிங்கப் பெருமான் திருக் கோயில் மகா சிவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு யாக பூசையும், 9.30 மணிக்கு பால் குட ஊர்வலம் சுப்ரமுனிய கோட்டத்திலிருந்து ஆரம் பமாகும். தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீசாந்திலிங்கப் பெருமான் திருக்கோயிலிலிருந்து விசேட அபிஷேகம் பூசை இடம்பெறும். இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேகம் பூசை என்பன நடைபெறும்.

# இன்றும் மின்வெட்டு!

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை அனைத்துப் பிரிவினருக்கும் மூன்று மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப் படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரத் தேவை அதிகரித்தால், இரவு நேரத்தில் மேலும் 30 நிமிடம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொதுமக்கள் மேலும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)

# டீசல் தட்டுப்பாடு காரணமாக எரிவாயு விநியோகம் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 01

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிவாயு விநியோகம் தடைப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

லிட்ரோ நிறுவனம், விநியோகஸ்தர்களுக்கு குறைந்தளவிலான எரிவாயு சிலிண்டர்களை மட்டுமே வழங்குவதாகவும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரி வாயுவை விநியோகிக்க முடியாதுள்ளதாக எரிவாயு நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள் ளதாகவும் விநியோகஸ்தர்கள் தெரிவித்தனர். (அ)

# மேலும் 205 பேர் குணமடைவு!

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 205 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 608,924 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் இது வரை கொவிட் தொற்றுக்கு உள் ளானவர்களின் எண்ணிக்கை 644,060 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# யாழ்.பல்கலைக்கழக 35ஆவது பட்டமளிப்பு; இரண்டாவது பகுதியில் 2,619 பேருக்கு பட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 01

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி மார்ச் 03ஆம், 04ஆம், 05 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் இரண்டு நாட்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் இரண்டு அமர்வுகளுமாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2,619 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு ஒன்று நேற்று முற்பகல் 10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், கல்வி மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் பிரிவின் உதவிப் பதிவாளர் எஸ். கே. பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி நிகழ்நிலையில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு வேந்தர் சம்பிரதாய பூர்வமாக இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டமையை உறுதி செய்வார் என கலைப் பீடத்தின் பீடாதிபதியும், பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கே. சுதாகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கியமையை உறுதிசெய்து பட்டதாரிகளை கௌரவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில் நுட்ப பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகத்தை) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் இந்த பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப் படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 238 பட்டப்பின் தகைமை பெற்றவர் களுக்கும், 1, 795 உள்வாரி மாணவர்களுக்கும், 585 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப் படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் இருந்து 238 பேர் பட்டப்பின் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை 04 பேரும், முதுமெய்யியல்மாணிப் பட்டத்தை 16 பேரும், சைவ சித்தாந்தத்தில் முதுகலை மாணிப் பட்டத்தை 31 பேரும், முது வியாபார நிருவாக மாணிப் பட்டத்தை 47 பேரும், சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை 14 பேரும், முதுகல்வியியல்மாணிப் பட்டத்தை 101 பேரும், பண்பாட்டியலில் முதுகலைமாணிப் பட்டத்தை 10 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப் பின் தகைமைச் சான்றிதழை 02 பேரும், நூலகத் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப் பின் தகைமைச் சான்றிதழை 13 பேரும் பெறுகின்றனர்.

உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 131 பேர் மருத்துவமாணி சத்திர சிகிச்சை மாணிப் பட்டத்தையும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 65 பேர் விவசாயத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 55 பேர் பொறியியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தையும் பெறுகின்றனர்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த 52 பேர் சட்டமாணிப் பட்டத்தையும், 309 பேர் சிறப்புக் கலைமாணி பட்டத்தையும், 15 பேர் மொழிபெயர்ப்புக் கற்கையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் ,02 பேர் கலைமாணி பொதுப் பட்டத்தையும் பெறுவுள்ளனர். மேலும், 63 பேர் நுண்கலைமாணி (நடனம் - பரதம் ) பட்டத்தையும், 56 பேர் நுண்கலைமாணி (சங்கீதம்) பட்டத்தையும், 20 பேர் நுண்கலைமாணி ( சித்திரமும், வடிவமைப்பும்) பட்டத்தையும் பெறுகின்றனர். இவர்களுடன், சித்த மருத்துவ அலகைச் சேர்ந்த 38 பேர் சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி பட்டத்தையும் பெறுகின்றனர்.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 24 பேர் தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும், 15 பேர் மருந்தகவியல்மாணி சிறப்புப் பட்டத்தையும், 18 பேர் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 174 பேர் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும், ஒருவர் மீன்பிடியியல் விஞ்ஞானத்தில் தகைமைச் சான்றிதழையும் பெறுகின்றனர்.

இவர்களுடன் , முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து வியாபார நிருவாக மாணி (சிறப்பு) பட்டத்தை 246 பேரும், வியாபார நிருவாக மாணிப் பட்டத்தை 08 பேரும், வியாபார நிருவாக மாணி பொதுப் பட்டத்தை 12 பேரும், வணிகமாணிப் பட்டத்தை 72 பேரும் பெறுகின்றனர்.

அத்துடன், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 88 பேர் பொறியியல் தொழில்நுட்ப மாணி (சிறப்பு) பட்டத்தையும், 77 பேர் உயிர்முறைமைகள் தொழில் நுட்பமாணி (சிறப்புப்) பட்டத்தையும் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் வவுனியா வளாகத்தின் (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழக) பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 27 பேர் தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தையும், 06 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 06 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தையும், 41 பேர் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும், 23 பேர் கணினி மற்றும் பிரயோக கணிதம் கணிப்பிடலில் விஞ்ஞான மாணி பொதுப் பட்டத்தையும், 13 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பொதுப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். மேலும், அதன் வியாபார கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 34 பேர் செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 80 பேர் வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தையும், 25 பேர் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தையும் பெறுகின்றனர்.

இவர்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறிய 146 பேர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 63 பேர் வணிகமாணிப் பட்டத்தையும், 370 பேர் கலைமாணிப் பட்டத்தையும், ஒருவர் சங்கீதமாணிப் பட்டத்தையும், 05 பேர் நடனமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

- நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந் தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய பட்டமளிப்பு நிகழ்வு ஒழுங்கு படுத்தப் பட்டுள்ளது.

- பட்டமளிப்பு விழாவுக்கு வழமை போன்று பட்டம் பெறும் மாணவர்களுடன், பெற்றோரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். பட்டம் பெறுகின்ற மாணவர்கள், மற்றும் அழைப்பின் பேரில் வருகை தர இருக்கின்றவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு விநயமாகக் கேட்டு கொள்கின்றோம்.

- விழா மண்டபம் மற்றும் ஒன்று கூடல் மையத்தில் பட்டதாரிகளும் அவர்களுடன் அழைக்கப்பட்ட பெற்றோர்களும் மட்டுமே அனுமதிக்கப் படுவார்கள் வீடியோ மற்றும் புகைப்படப்பிடிப்பாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

-பட்டமளிப்பு நிகழ்வுகள் அனைத்தும் எமது பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் இணையத்தளம் வாயிலாகவும், முகப் புத்தகம், யூ ரியூப் சனல் களின் ஊடாகவும் நேரலையாக ஒளி பரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பட்டமளிப்பு விழா அரங்குக்கு வெளியிலும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதோடு, சமூக இடைவெளியைப் பேணுவதன் மூலம் இந்த நிகழ்வு வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது-என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu
01.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நிர்ப்பந்தங்களால் வரும் மாற்றங்கள்?

அரசியலில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. அரசியலில் ஒரு காலத்தில் சரியென்று கருதப்படும் முடிவுகள். பிறிதொரு காலத்தில் தவறென்று உணரப்படலாம். அதேபோன்று, ஒரு காலத்தில் தவறென்று கருதப்பட்டவை பின்னர், சரியென்று ஏற்கப்படலாம். இந்த மாற்றங்கள் அனைத்தும் விருப்பங்களிலிருந்து ஏற்படுபவை அல்ல – மாறாக சூழ்நிலை மாற்றங்களால் ஏற்படும் மாற்றங்களாகும். ரஷ்யாவின் படையெடுப்பை தொடர்ந்து, உலக அரசியல் சடுதியாக மாற்றமடைந்திருக்கின்றது. ஐரோப்பாவில் போர் மேகமொன்று உருவாகி வருகின்றது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலக அரசியலில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன.

தாய்வானின் சுயாதீனத்தை சீனா அங்கீகரிக்க மறுக்கின்றது. ஆனால், தாய்வானின் சுயாதீனத்தை அமெரிக்கா அங்கீகரிக்கின்றது. இந்த நிலையில் ரஷ்யாவின் இராணுவ நகர்வு சீனாவுக்கும் உற்சாகத்தை கொடுத்திருப்பதாக சில கணிப்புக்கள் கூறுகின்றன. தாய்வானை இராணுவ ரீதியில் சீனா ஆக்கிரமிப்பதற்கான வாய்ப்புள்ளதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் எச்சரித்திருக்கின்றனர். இந்த நிலையில், ஜப்பானின் முன்னாள் ஜனாதிபதி ஷின்சோ அபே, அமெரிக்காவின் அணுவாயுத தளமொன்றை ஜப்பானில் நிறுவ வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர், ஜப்பானில் அணுவாயுத உற்பத்தி மற்றும் ஏனைய நாடுகளின் அணுவாயுத தளங்களை நிறுவுவதை ஜப்பான் நிறுத்தியிருந்தது. ஆனால், தற்போதைய பதற்ற நிலையானது, அமெரிக்காவின் அணுவாயுத தளத்திற்கு இடமளிக்க வேண்டுமென்னும் சிந்தனையை ஜப்பானுக்குள் ஏற்படுத்தியிருக்கின்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, ஜப்பானின் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள்மீது, அமெரிக்கா அணுகுண்டு தாக்குதலை மேற்கொண்டு, ஜப்பானை நிர்மூலமாக்கியது. எனினும், அடித்த அமெரிக்காவோடே, ஜப்பான் பின்னர் கூட்டுச் சேர்ந்து கொண்டது. விருப்பங்களிலிருந்து உலகத்தை நோக்காமல், தங்களின் தேவைகளிலிருந்து உலகத்தை நோக்கியதால், அமெரிக்காவோடு கூட்டுச் சேரும் மூலோபாய முடிவை ஜப்பான் எடுத்திருந்தது.

அரசியலில் புனித கொள்கைகள் எதுவுமில்லை. புனித கொள்கைகளை வைத்திருப்பதாகக் கூறுபவர்கள் அரசியலில் முன்நோக்கி பயணிப்பதுமில்லை. அவ்வாறானவர்களால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைப்பதுமில்லை. அரசியலில் சூழ்நிலை கருதி முடிவுகளை எடுப்பவர்களே வெற்றிபெறுகின்றனர். ஓர் அரசியல் முடிவென்பது வெற்றியை காண்பிக்க வேண்டும். ஒருவேளை தோல்வியடைந்தால், அந்த தோல்வியிலிருந்து கற்றுக்கொண்டு, தவறுகளை ஒப்புக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் தயங்கக்கூடாது.

ஜப்பானின் அணுகுமுறையிலிருந்து ஈழத் தமிழர்கள் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏனெனில், இப்போதும் கடந்த காலத்தை நினைவுபடுத்தும், கடந்த காலத்தை மனதில் கொண்டு விவாதங்கள் செய்யும் ஒரு போக்கு, தமிழ்த் தேசிய பரப்பில் காணப்படுகின்றது. இவ் வாறான கடந்தகாலம் தொடர்பான உணச்சிவசப்பட்ட பார்வைகள் எந்த வகையிலும் தமிழ்த் தேசிய அரசியல் முன்நோக்கி பயணிப்பதற்கு பயன்படாது.

கடந்த காலம் கசப்பான அனுபவங்களைத் தந்திருந்தாலும்கூட, அந்த அனுபவங்களைக் காவிக் கொண்டிருப்பதால், முன்நோக்கி பயணிக்க முடியாது. இதனை தமிழர் அரசியல் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால், தமிழ் சூழலில் துரோகிகள், காட்டிக் கொடுப்பாளர்கள், எட்டப்பர்கள், முகவர்கள் என்னும் சொற்களுடன் மல்லுக்கட்ட வேண்டிய தேவையேற்படாது. அரசியலை அறிவுபூர்வமாக அணுகும் எவரும் இவ்வாறான சொற்களுடன் மல்லுக்கட்ட மாட்டார்கள். விடுதலைப் புலிகள் தோல்வியடைந்தபோது, பல நாடுகள் குறிப்பாக, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ராஜபக்ஷவின் போருக்கு உதவியதாக தமிழ் சூழலில் ஆங்காங்கே ஆவேசமாகப் பேசப்பட்டது. ஆனால், இன்று அந்த – இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் அழுத்தங்களை கோரித்தான் தமிழர் அரசியல் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றது. மஹிந்தவின் போருக்கு இந்த நாடுகள் அனைத்தும் ஆசீர்வாதம் வழங்கியது உண்மைதான். ஆனாலும் இன்றைய உலகில் அவர்களுடன்தானே மீளவும் தமிழர்கள் உரையாட வேண்டியிருக்கின்றது. இதே போன்றுதான் ஏனைய விடயங்கள் அனைத்தும். ஏனெனில், அரசியல் முடிவுகள் நிர்ப்பந்தங்களால் நிகழ்பவை, விருபங்களால் அல்ல.

# இலங்கையில் உக்ரேனியர்கள் - ரஷ்யர்கள் !

**அலசுவது இராஜதந்திரி**

உக்ரைனுக்குள் ரஷ்யா புகுந்துள்ளதையடுத்து அங்கு பெரும் மனித அவலம் தோற்றம்பெறும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. ஏற்கனவே, ரஷ்ய படைகளின் தாக்குதல்களிலிருந்தும் அனைத்துவிதமான கெடுபிடிகளிலிருந்தும் தம்மை பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் உக்ரைன் மக்கள் அந்நாட்டின் பாதாள ரயில் நிலையங்களிலும் இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தரைக்கீழ் பதுங்கு குழிகளுக்குள்ளேயும் தற்போது தஞ்சமடைந்தள்ளனர். ரஷ்யா, உக்ரைன் போன்ற நாடுகள் பொதுவாகவே கடுங்குளிரான காலநிலையைக் கொண்டவையாகும். தமது தொழில் நடவடிக்கைகள் தவிர, வீடுகளுக்குள்ளேயே மக்கள் பெரிதும் முடங்கியிருப்பர். ஆனால், தற்போது ரஷ்யா அசுரத்தனமான முறையில் ஈவிரக்கமின்றி தாக்குதல்களை நடத்தி முன்னேறிவரும் தருணத்தில் அப்பாவி உக்ரேனிய மக்கள் தமது பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் பாதுகாப்பான இடங்களை தேடி தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இத்தகைய பின்னணியில் தற்போது இலங்கையில் உல்லாசப் பயணிகளாக தங்கியுள்ள உக்ரைன் மற்றும் ரஷ்ய நாடுகளின் மக்கள் மீளவும் தமது நாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையில் சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

ரஷ்யாவிலும் உக்ரைனிலும் தற்போது கடுங்குளிர் நிலவும் காலப்பகுதியில் வெப்பவலய நாடாக இருக்கும் இலங்கை அந்த நாட்டவர்களுக்கு ஒரு சொர்க்கபுரியாகவே இருக்கின்றது.

ஆண்டுதோறும் இலங்கை வருகின்ற உல்லாசப் பயணிகளில் ரஷ்ய, உக்ரைன் உல்லாசப் பயணிகளே அதிகமானவர்களாக இருக்கின்றனர். தற்சமயம் அதாவது யுத்தம் மூளுவதற்கு முன்பதாக இலங்கை வந்து தற்போது தமது நாடுகளுக்கு திரும்புவதில் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளவர்களில் 4,000 உக்ரேனிய உல்லாசப் பயணிகள் அடங்குகின்றனர். அதேசமயம் 11,500 ரஷ்ய உல்லாசபயணிகள் இலங்கையில் தங்கியுள்ளனர். இவர்கள் பெரிதும் இலங்கையின் கடற்கரையோரங்களிலேயே கடலில் குளித்தும் வெயிலின் சுகத்தையும் அனுபவிப்பவர்களாக இருக்கின்றனர்.

எனவே, தற்சமயம் இலங்கையில் தங்கியுள்ள ரஷ்ய, உக்ரேனிய உல்லாசப் பயணிகள் இலங்கையில் தங்கியிருப்பதற்கான தமது கால எல்லையை நீடிக்கும் விதத்தில் வீசாக்களை வழங்கவும் இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் காலி நகரில் தங்கியுள்ள உக்ரைன் நாட்டு உல்லாசப் பயணிகள் ரஷ்யா தமது நாட்டுக்குள் பிரவேசித்ததை கண்டித்து தாம் தங்கியுள்ள ஹோட்டல்களுக்கு வெளியே வந்து ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியிருந்தனர். காலி நகரில் மட்டுமல்ல. தென்னிலங்கையில் பெந்தோட்ட, ஹிக்கடுவை, மிரிஸ்ஸ, உனவத்துன போன்ற கடற்கரையோர உல்லாசப்பயண ஹோட்டல்கள் அமைந்துள்ள இடங்களிலும் ரஷ்யாவின் உக்ரைன்மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைன் உல்லாசப் பயணிகள் ஆரப்பாட்டம் செய்திருந்தனர்.

இதுதவிர, நேற்றைய தினம் கொழும்பிலும் ரஷ்ய தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டிருந்தது. இலங்கையின் மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தத்தைப் பொறுத்தவரை சர்வதேச சந்தையில் மேற்கத்தேய ஆயுதங்களைவிட மலிவாகக் கிடைக்கக்கூடிய ரஷ்ய, உக்ரைன் ஆயுத தளபாடங்களே இலங்கையின் ஆயுதப் படையினரால் பாவிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஏ.கே-47 ரக ரஷ்ய துப்பாக்கிகள் மற்றும் யுத்த டாங்கிகள், அன்ரநோவ் விமானங்கள், மிக் சண்டை விமானங்கள் எம்.ஐ-17 ரக ஹெலிகாப்டர்கள் யாவும் ரஷ்யா மற்றும் உக்ரைனிலிருந்து பெறப்பட்டவையாகவும், அவற்றை இயக்குவதற்கு ரஷ்ய , உக்ரைன் விமானிகளும் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டனர். இதுதவிர, இந்திய அமைதிப் படையினர் இலங்கையில் இயங்கிய காலத்தில் அவர்களால் பாவிக்கப்பட்ட ஆயுத தளபாடங்களில் ஏராளமானவை ரஷ்ய, உக்ரைன் தயாரிப்புகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் தற்போது உல்லாசப் பயணிகளாக வந்து தமது தாயகங்களுக்கு திரும்ப முடியாதிருக்கின்ற ரஷ்ய, உக்ரைன் உல்லாசப் பயணிகள் யுத்தம் முடிவடையும்வரை இலங்கையில் தங்குவதற்கு முன்வந்திருக்கின்றனர். ஏனெனில், தற்போதைய சூழலில் அவர்களால் பாதுகாப்பாக தாயகம் திரும்பி வாழு முடியாது. எனவே, அவர்கள் இலங்கையில் தங்கும் விருப்பத்தை அறிந்து தென்னிலங் கையில் பல ஹோட்டல்களும், தனியார் விடுதிகளும் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளன.

ரஷ்யாவைப் பொறுத்தவரை இலங்கை 140 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தேயிலையை ரஷ்யாவுக்கு ஆண்டு தோறும் ஏற்றுமதி செய்கின்றது. எனவே, ரஷ்யா மீது பொருளாதார தடைகள் உத்வேகம் பெறும்பட்சத்தில் இலங்கையின் தேயிலையை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதிலும் பலத்த சங்கடங்களை எதிர்கொள்ள முடியும். இதனால் ஏற்கனவே மிக மோசமான நிலையிலுள்ள இலங்கை பொருளாதாரம் மேலும் பாதிப்படையும் என்றே எதிர்பார்க்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 01 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - மாசி 17
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
பணியிடத்தில் இருந்த சிரமங்கள் விலகி நிம்மதி ஏற்படும். ஏமாற்றங்கள் தொடரும். பணியாளர்கள் பொறுமை காக்க வேண்டும். வாகன வகையில் செலவு ஏற்படும். வம்புகளில் ஈடுபட வேண்டாம்.

**இடபம்**
எதிர்பாராத நிகழ்வால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகளுக்கு நன்மை உண்டு. தாதமங்களை தவிர்க்க இயலாது. வீண் பழி ஏற்படாமல் தப்புவீர்கள். வியாபாரிகளின் எதிர்பார்ப்புகள் இன்று நிறைவேறும்.

**மிதுனம்**
யோகம் உண்டாகும். குடும்பத்தினருடன் ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய கூட்டாளிகளை சேர்க்க வேண்டாம். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் உதவுவர்.

**கடகம்**
குழந்தைகள் தங்களுடைய பொறுப்பை அறிந்து செயல்படுவர். புதிய வாகனம் வாங்குவீர்கள். அதன் மூலம் லாபம் கிடைக்கும். சமீபத்தில் மாறியிருக்கும் வீடு உங்களுக்கு மகிழ்ச்சியைத் தராது.

**சிம்மம்**
எதிர்பாராதவை நிகழும். குழந்தைகளால் பிரச்னைகள் ஏற்படும். கூடுதல் வருமானம் மகிழ்ச்சி அளிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். மேலதிகாரிகளை அனுசரித்து சென்று நிம்மதி காண்பீர்கள்.

**கன்னி**
உறவினர்கள் இடையே இருந்து வந்த பிரச்னை தீரும். யாருடனும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி அடைவீர்கள்.

**துலாம்**
பிறரை நம்பி எந்தவொரு விஷயத்திலும் ஈடுபடாமல் இருப்பது உத்தமம். மேலதிகாரிகளுடன் மகிழ்ச்சியான உரையாடல் உண்டு. சுபநிகழ்ச்சி பற்றிய பேச்சுவார்த்தையில் இருந்த தாமதம் நீங்கும்.

**விருட்சிகம்**
மற்றவர்களை அனுசரித்து சென்று நன்மை காண்பீர்கள். நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். பணவரவு அதிகரிக்கும். பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும்.

**தனுசு**
சலிப்பும் கவலையும் தீரும். தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் பணிச்சுமை குறையும். பணவரவு தடைபடாது. பங்குதாரர் மூலம் நிம்மதி கிடைக்கும்.

**மகரம்**
வருத்தம் நீங்கும். எதிர்காலக் கவலை தீரும். முயன்ற விஷயங்கள் தாமதமானாலும் அது நல்லபடியாக முடியும். சகபணியாளர்களுடன் இருந்து வந்த பிரச்னை தீரும்.

**கும்பம்**
பிரச்னை தீரும். பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பண விவகாரங்களில் இருந்த அதிருப்தி நீங்கும். முயற்சியில் வெற்றி உண்டு. மற்றவர்கள் பிரச்னைகளில் தலையிட வேண்டாம்.

**மீனம்**
அக்கம்பக்கத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நிம்மதி கூடும். தம்பதி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகளுக்கு உங்களின் ஆலோசனைகள் உதவும்.

# முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது; அ.தி.மு.கவினர் எதிர்த்துப் போராட்டம்!

சென்னை, மார்ச் 01

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைதுக்கு எதிராக அ.தி.மு.க. தொண்டர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

வேலூர், உட்பட பல இடங்களில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதை கண்டித்தும் அ.தி.கவினர் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டதில் அ.தி.மு.க. தொண்டர்கள் நுரற்றுக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைதுக்கு எதிராக கோசங்கள் எழுப்பினர்.

வேலுரரில் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்த பொலிஸார் போராட்டம் நடத்தியவர்களிடம் பேச்சு வார்ததை நடத்தியதை




தொடர்ந்து அவர்கள் கலைந்து சென்றனர். இந்த போராட்டத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தில் கடந்த 19 ஆம் திகதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. அன்று சென்னையில் வாக்குப்பதிவின்போது கள்ள வாக்க போட முயன்றதாக கூறி தி.மு.கவை சேர்ந்த நரேஷ் என்பவரை தாக்கி, அரை நிர்வாணமாக இழுத்து சென்றதாக புகார் கொடுக்கப்பட்டது.

இந்த புகார் அடைப்படையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உட்பட அதிமுகவினர் 40 பேர் மீது கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

# தமிழக மாணவர்கள் அதிகளவில் உக்ரைன் செல்வதற்கு காரணம்?

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்

சென்னை, மார்ச் 01

தமிழக மருத்துவ கல்லூரிகளில் இடம் கிடைக்காதவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில செல்கின்றனர். குறைந்த கட்டணம் வசூலிக்கக்கூடிய நாடுகளில் கல்வி பயில செல்வது வழக்கம் தான். அந்த வகையில் தான் உக்ரைனுக்கு அதிகம் தமிழக மாணவர்கள் செல்கின்றார்கள்.

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

உக்ரைன் வான்பகுதி மூடப்பட்ட நிலையில், அண்டை நாடுகளின் எல்லைக்கு வரவழைத்து இந்தியர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. 'ஒப்பரேஷன் கங்கா' என்ற பெயரில் இந்த மீட்புப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உக்ரைனில் இருந்து மாணவர்கள் மீட்பு குறித்து அமைச்சர் சுப்பிரமணியன் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தமிழக மருத்துவ கல்லூரிகளில் இடம் கிடைக்காதவர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில செல்கின்றனர். குறைந்த கட்டணம் வசூலிக்கக்கூடிய நாடுகளில் கல்வி பயில செல்வது வழக்கம் தான். அந்த வகையில் தான் உக்ரைனுக்கு அதிகம் தமிழக மாணவர்கள் செல்கின்றார்கள். உக்ரைனில் உள்ள மாணவர்களை தமிழகம் திரும்புவதற்கான செலவை அரசே ஏற்கிறது. உக்ரைனில் உள்ள மாணவர்களை மீட்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் கூறியுள்ளார்.

# சிவராத்திரி தின நிகழ்ச்சி நடத்துவதற்கு விடுதலைச் சிறுத்தைகள், தி.க எதிர்ப்பு

சென்னை, மார்ச் 01

சென்னை, மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை கலாசார நிகழ்ச்சிகளை நடத்த இந்து சமய அறநிலையத் துறை முடிவு செய்துள்ளதை, விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் திராவிடர் கழகம் கடுமையாக விமர்சித்துள்ளன.

இராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் சுமார் 40,000 பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்து அறநிலையத் துறை இவ்வளவு பெரிய நிகழ்வை நடத்துவது இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது, தி.மு.கவின் கூட்டணிக் கட் சியான விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்த நிகழ்வு ஒரு மதத்தை வளர்ப்பது என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட் சியின் மூத்த தலைவர் வன்னி அரசு, அரசுத் துறையானது சில குறிப்பிட்ட நம்பிக்கையின் கருத்தை ஊக்குவிக்கும் வகையில் செயல்பாடுகளை ஏற்பாடு செய் யக்கூடாது என்று கூறியுள்ளார்.

அவருடைய கருத்துகளை எதிரொலித்த திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி. வீரமணி, பகுத்தறிவாளர்கள் மற்றும் மதச் சார்பின்மைவாதிகளின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில், குறிப்பிட்ட சமூகத்தை திருப்திபடுத்துவதைத் தவிர்க்க வேண்டு மெனக் கூறியுள்ளார்," என்று குறிப்பிட்டுள்ளது.

# திமுக.,வினர் தில்லுமுல்லு செய்து தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 01

திமுக.,வினர் கள்ள வாக்கு போடுவதில் வல்லமை பெற்றவர்கள் என்று அ.தி.மு,க. இணை ஒருங்கிணைப்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அதிமுக., முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை, மதுரை, நெல்லை, சேலம் உள்ளிட்ட இடங்களில் நேற்று அ.தி.மு.கவினர் போராட்டம் நடத்தினர்.

சேலத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கிய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, கூறியதாவது, அதிமுக., தமிழகத்தில் ஆக்கப்பூர்வ எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சி மீது பொய் வழக்குப் போடுவதை திமுக., வழக்கமாக கொண்டுள்ளது. முன்னாள் அமைச்சர் ஜனநாயக ரீதியாக செயல்பட்டதற்கு கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ள வாக்கு போட முயன்றவரை பிடித்து கொடுப்பது குற்றமா?

திமுக., கள்ள வாக்கு போடுவதில் வல்லமை பெற்றவர்கள். வாக்கு எந்திரத்தில் எந்த பட்டனை அழுத்தினாலும் திமுக.,விற்குதான் வாக்கு செல்வது போன்று தில்லுமுல்லு செய்து தேர்தலில் வெற்றி பெற்றார்கள் என்று அவர் கூறினார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து முன்னர் எவருமே எனக்கு அறிவிக்கவில்லை

## சத்தியம் செய்கிறார் மைத்திரிபால

கொழும்பு, மார்ச் 01

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த நிலையில் தான் சிங்கப்பூருக்கு சென்றதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன மறுத்துள்ளார்.**



சு.கவின் பொலனறுவை மாவட்ட மாநாடு அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய அவர், மருத்துவ சிகிச்சைக்காகவே சிங்கப்பூர் சென்றேன். வைத்தியசாலையில் இருக்கையில் எனக்கு தொலைபேசி அழைப்பு வந்ததாக குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால் எலிசபெத் ஆஸ்பத்திரிக்குள் தொலைபேசி பாவிக்க முடியாது. எனக்கு எந்த அழைப்பும் வரவில்லை. நான் நியமித்த ஆணைக்குழு விசாரணையிலும் நான் இதனை தெரிவித்தேன். என்னை யாரும் அறிவூட்டவில்லை.

எந்த தகவலாவது கிடைத்திருந்தால் ஊரடங்கு அமுல்படுத்தி அதனைத் தடுத்திருப்பேன். குண்டு வெடித்த 2019 ஜனவரி மாதம் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சஹ்ரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது குறித்து வினவியிருந்தேன். புலனாய்வு அதிகாரிகள், பொலிஸார் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள். என் மீதான குற்றச்சாட்டு தொடர் பில் கவலையடைகிறேன். நான் உண்மையான பௌத்தன். எனக்கு குண்டு வெடிப்பு தொடர்பில் எவரும் அறிவிக்க வில்லை-என்றார். (அ)

# அரசிலிருந்து வெளியேற தயாராகும் சுதந்திர கட்சி

கொழும்பு, மார்ச் 01

தேவையான நேரம் வரும்போது மத்திய குழுவின் அனுமதியுடன் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பொலனறுவை மாவட்ட மாநாட்டில் நேற்று முன் தினம் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், குறித்த நிகழ்வில் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி சிறிசேனவும் கலந்துகொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஸ்கானர் இயந்திரத்துடன் வவுனியாவில் 5 பேர் கைது!

வவுனியா, மார்ச் 01

வவுனியா நகரப்பகுதியில் நிலத்தை கண்காணிக்கப் பயன்படும் ஸ்கானர் இயந்திரத்தை உடைமையில் வைத்திருந்த 5பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா மரக்கறிச்சந்தை பகுதியில் வைத்து கப் வாகனம் ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போது அந்த வாகனத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்கு பயன்படும் ஸ்கானர் இயந்திரம் ஒன்று கொண்டு செல்லப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தில் பயணித்தவர்களை கைது செய்த விசேட அதிரடிப்படையினர் அவர்களை வவுனியா பொலிஸில் ஒப்படைத்தனர்.

கைது செய்யபட்டவர்கள் பியகமவை சேர்ந்த 4 பேரும், பிலியந்தலவை சேர்ந்த ஒருவருமாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக வவுனியாவில் கையெழுத்து போராட்டம்!





வவுனியா, மார்ச் 01

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு கோரி வவுனியாவின் பல்வேறு இடங்களில் கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்ப்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் காலை 8.30 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியிலும் பின்னர் இலுப்பை யடி உட்பட நகரின் சில பகுதி கள், செட்டிகுளம் போன்ற பகுதிகளில் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், வாலிபர் முண்ணனியின் தலைவர் கி.சேயோன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றத்தால் வெதுப்பக உற்பத்தித்துறை பெரிதும் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 01

எரிபொருள் மற்றும், மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக வெதுப்பக உற்பத்தித்துறை பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா விலை அதிகரிப்பினாலும் தமது தொழிற்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

எரிபொருள் இன்மை காரணமாக வெதுப்பக உற்பத்திகளை வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தாம் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன குறிப்பிட்டார். (அ)

# மேல் மாகாணத்தில் தற்காலிகமாக தங்கியுள்ளோரின் விவரம் திரட்டல்

கொழும்பு, மார்ச் 01

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மேல் மாகாணத்துக்கு வந்து தங்கியுள்ள தற்காலிக குடியிருப்பாளர்களில் 20 பேர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனை தொடர்ந்து மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 123 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தற்காலிகமாக தங்கியுள்ள 11 188 பேரின் தகவல்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது. (அ)

# எரிபொருள்கள் விநியோகத்தின்போது பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை

## அரசிடம் தனியார் பஸ் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 01

எரிபொருள் விநியோகத்தில் பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமையளிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இன்மையால் பாரிய அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உயர் தரப்பரீட்சை இடம்பெற்று வருவதுடன், அலுவலகப் பணிகள் ஆகிய அத்தியாவசிய சேவைகளுக்காக பொதுப் போக்குவரத்தை மக்கள் பயன்படுத்துகின்றனர்.

எனவே, எரிபொருள் விநியோகத்தின் போது, பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை வழங்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கேட்டுக்கொண்டார். (அ)

# இரணைதீவு கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களும் விடுதலை!

கிளிநொச்சி, மார்ச் 01

கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறை தண்டனை விதித்த நீதிவான், அவர்களை விடுவிப்பதற்கு உத்தரவிட்டார். இரணைதீவு கடற்பரப்பில் சடடவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், குறித்த 12 இந்திய மீனவர்களும் கடந்த 13 ஆம் திகதி கடற்படையினால் கைது செய்யப்பட்டிருந்தனர். (அ)

# சாந்தபுரம் கிராமம் யாருக்கு சொந்தம்?

## வெடித்தது சர்ச்சை

**கிளிநொச்சி, மார்ச் 01**

**கிளிநொச்சி - அம்பாள்நகர் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சாந்தபுரம் கிராமம் எல்லை நிர்ணயத்தின்போது முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உள்வாங்கப்படும் என்ற தகவல்களால் சாந்தபுரம் மக்களிடையே பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.**



இது தொடர்பில் ஆராயும் கூட்டம் ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் தலைமையில் நடைபெற்றது.

சுமார் 32 வருடங்களாகக் கிளிநொச்சி நிர்வாக சேவை பரப்புக்கு உட்பட்டு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சமூக சேவைகள் அனைத்தும் கிளிநொச்சி நிர்வாகங்களினாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

எனினும் புதிய எல்லை மறுசீரமைப்பின்போது குறித்த கிராமம் முல்லைத்தீவு எல்லைக்குள் கொண்டு செல்லப்படும் என்று சில அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் மக்கள் மிகுந்த பதற்றம் அடைந்து காணப்பட்டனர்.

குறித்த குழப்பங்களை இனங்கண்டு தீர்வு காண வழி காட்டும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை மக்கள் அழைத்து நேற்று கலந்துரையாடினர்.

இதன்போது குறித்த அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்தி எல்லை மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு அரச அதிபர் ஊடாக அனுப்பி வைப்பதற்கும் பாராளுமன்றத்துக்கு இவ்விடயத்தைக் கொண்டு செல்வதற்கும் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா, கட்சியின் அமைப்பாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இரண்டு மாதங்களில் 434 வீதி விபத்துக்கள்!

## 457 பேர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 01

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 434 வீதி விபத்துக்களில், 457 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதில் 177 மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற 43 வீதி விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# நீர்வீழ்ச்சியிலிருந்து விழுந்து வெளிநாட்டவர் உயிரிழப்பு!



கொழும்பு, மார்ச் 01

கிதல் நீர்வீழ்ச்சியை பார்வையிட சென்ற வெளிநாட்டவர் ஒருவர் நீர்வீழ்ச்சியில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

33 வயதுடைய ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலம் பதுளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# இரண்டு எரிபொருள் கப்பல்கள் நேற்று நாட்டை வந்தடைந்தன

கொழும்பு, மார்ச் 01

மேலும் இரண்டு எரிபொருள் கப்பல்கள் நேற்று நாட்டை வந்தடைந்ததாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு கப்பலில் 28,500 மெற்றிக் தொன் ஒட்டோ டீசல் மற்றும் 9,000 மெற்றிக் தொன் ஜெட் எரிபொருள் இருந்ததாகவும், மற்றைய கப்பலில் 30,300 மெற்றிக் தொன் ஒட்டோ டீசலும் 7000 மெற்றிக் தொன் சுப்பர் டீசலும் இருந்ததாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல்கள் சிங்கப்பூரில் இருந்து இலங்கைக்கு வந்தடைந்துள்ளன.

இதேவேளை, 30 மில்லியன் டொலர் பெறுமதியான 38,400 மெற்றிக் தொன் பெற்றோலை இன்று முதல் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# குருநாகலில் மஹிந்தவின் அலுவலகம் திறக்கப்படுவதை நிறுத்திய அமைச்சர்

கொழும்பு, மார்ச்.01

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குருநாகல் மாவட்ட இணைப்பு அலுவலகம் நேற்று முன்தினம் முற்பகல் திறக்கப்படவிருந்த நிலையில், அலுவலகத்தின் திறப்பு விழாவை திடீரென மார்ச் 5 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளதாக தெரியவருகிறது.

குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர் ஒருவர், அலுவலகம் திறக்கப்படுவதை தாமதிக்குமாறு விடுத்த கோரிக்கையே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

குருநாகல் - புத்தளம் வீதியில் யந்தம்பலாவ பகுதியில் இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளதுடன் பிரதமரின் சகல ஒருங்கிணைப்புப் பணிகளும் அவரது தனிப்பட்ட செயலாளரான இளைய புதல்வர் ரோஹித ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் தனிப்பட்ட செயலாளரான ரோஹித ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலுவலகம் திறக்கப்படவிருந்தது. அலுவலகம் அமைந்துள்ள கட்டடம் கடந்த பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.(அ)

# அடுத்த 3 மாதங்களுக்கு தேவையான மருந்துப் பொருட்களே கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 01

நாட்டில் அடுத்த 3 மாதங்களுக்கு தேவையான மருந்துப்பொருட்களே அரச வைத்தியசாலைகள் வசமுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒளடத உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். தனியார் பிரிவுகளுக்கு மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்யும்போது ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி தொடர்பில், சம் பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனிடையே, பரசிட்டமோல் மருந்து உற்பத்தியை துரிதப் படுத்துமாறு உரிய தரப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பரவிவரும் நோய்கள் காரணமாக பரசிட்டமோல் மருந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

# திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும் வைபவம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 01

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள்,மரணம்,உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17, மார்ட்டீன் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் “கலைஞான சுரபி” தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் தற்போதைய இயக்குநர் அருள்பணி அ.பி.ஜெயசேகரம் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன்,இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கிவைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற் கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத் துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு “காவிய நாயகன்” என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு திரு மறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.“காவிய நாயகன்“ ஆற்றுகை முதன்முதலாக 2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 2004,2008 ஆம் ஆண்டுகளிலும் இறுதியாக 2013 ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2020 ஆம் ஆண்டில் மீண்டும் இவ்வாற்றுகையை மேடையேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக இறுதி நேரத்தில் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் இரு பகுதிகளில் வாள்வெட்டு சம்பவங்கள்

## இரண்டு பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 01

தென்மராட்சி - நாவற்குழி மற்றும் கெற்பேலி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களில் இருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நாவற்குழி ப.நோ.கூ சங்க மண்டபத்துக்கு முன்னால் இடம்பெற்ற சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதிவாகியுள்ளது. சம்பவத்தில் கைதடியைச் சேர்ந்த ரத்தினகுமார் சுவின்சன் (வயது 24) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, கெற்பேலி மத்தியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்த இராசதுரை கோணேஸ்வரன் (வயது36) என்பவர் தலையில் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நான்காவது டோஸ் குறித்து இன்னும் தீர்மானம் இல்லை

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 01

இலங்கையர்களுக்கு நான்காவது டோஸை கொள்வனவு செய்யவோ அல்லது வழங்கவோ அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆனால் 3 ஆவது டோஸ் மூலம் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் செயல்முறையை விரைவுபடும் என இராஜாங்க அமைச்சரான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் டோஸுக்கான கொள்முதல் உத்தரவை வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கிறதா என வினவியபோது, அதிக ஆபத்துள்ள குழுவின் கீழ் வரும் அனைத்து இலங்கையர்களுக்கும், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடுவதே அரசாங்கத்தின் இப்போதைய இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொற்று நோயினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும் மரணமடைவதையும் தடுக்கும் ஒரே வழி இலங்கையர்களிடையே பூஸ்டர் டோஸ் அல்லது 3ஆவது டோஸ் கொண்ட மெதுவான முன்னேற்றம் என்றும் அவர் தெரிவித்தார்.



முதல் டோஸ் கொடுக்கப்பட்ட 168,96,733 பேரில் 71, 39,133 கோவிட் 19 நோயாளிகளுக்கு மாத்திரமே பூஸ்டர் டோஸ் மூலம் தடுப்பூசி போடப்பட்டது, அது திருப்திகரமாக இல்லை. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றாத மற்றும் பிற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரமான வைரஸ் தொற்றுக்கு எதிராக போராட 3 ஆவது டோஸ் அவசியம் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

30 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கையர்களும் சரியான நேரத்தில் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது டோஸ்களைப் பெற்றால், எதிர்வரும் மாதங்களில் இந்த தொற்றுநோயைக் கட்டுப்படுத்த முடியும் என் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 3389 பேருக்கு காணி இல்லை

முல்லைத்தீவு, மார்ச் 01

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழும் 3389 பேர் காணியில்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக மாவட்ட செயலக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக மக்கள் தொகையை கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றும் காணிகள் அற்ற நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

காணி அற்றவர்களுக்கான காணிகளை வழங்கும் நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளன.

இவ்வாறானவர்கள் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் 3389 பேர் காணி அற்றவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இளம் தொழில் முனைவோருக்கான விண்ணப்பங்களில் 28676 பேர் தொழில் செய்வதற்கான காணிகளுக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

அவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றுள்ளன என்றும் மாவட்ட செயலக புள்ளிவிவர தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இசை நிகழ்ச்சிகள் காரணமாக புதிய தொற்று அலை அபாயம்!

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 01**

**நாடளாவிய ரீதியில் பொதுமக்கள் ஒன்று கூடும் வகையில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் காரணமாக புதிய கொரோனா அலை ஏற்படும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதனூடாக தடுப்பூசிக்கு பதிலளிக்காத கொரோனா திரிபு உருவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புள்ளிவிவர ரீதியாக கொரோனா தொற்று தொடர்பில் சரியான தகவல்கள் கிடைக்கப்படாதபோதிலும், இலங்கையில் கொரோனா பரவல் மிக அதிகமாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

குறிப்பாக சுகாதார கட்டுப்பாடுகளை பொதுமக்கள் மிகவும் இறுக்கமாக கடைபிடிக்கவேண்டும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் திறந்துவைப்பு

தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகம் முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசாவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிறீதரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான ரவீகரன், வைத்தியர் ப.சத்தியலிங்கம் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியா வைத் தியசாலை சுற்றுவட்ட வீதியில் குறித்த அலுவலகம் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டில் ரயில் சேவைகள் தடைப்படும் அபாய நிலை

கொழும்பு, மார்ச் 01

ரயில்வே திணைக்களத்திடம், அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மட்டுமே எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ரயில்வே திணைக்களத்தினால் 10 நாட்களுக்கு எரிபொருளை சேமித்து வைக்க முடியும் என்றபோதிலும், தற்போது சுமார் 50 வீதத்தினால் அது குறைந்துள்ளதாக அவர் கூறினார்.

திணைக்களத்தின் எரிபொருள் கையிருப்பு குறைந்துள்ளபோதிலும், ரயில் சேவைக்கு அது தடையாக இருக்காதென தான் நினைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாளொன்றுக்கு சுமார் 100,000 லீற்றர் எரிபொருள் பயன்பாட்டில் ரயில்கள் இயங்குவதாகவும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளாந்த அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்யும் முறையை செயற்படுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மாகாணங்களுக்கு இடையே பஸ் இன்று முதல் நிறுத்தப்படும் நிலை

கொழும்பு, மார்ச் 01

டீசல் கிடைக்காத காரணத்தினால் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் சேவை இன்றுடன் நிறுத்தப்படும் என மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் கிட்டத்தட்ட 50 வீத மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ்கள் இயங்குவதை நிறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பஸ் நடத்துநர்கள் டீசலைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளது. இதேவேளை, பஸ்களில் எரிபொருளை நிரப்புவதற்காக வரிசையில் பயணிகளுடன் காத்திருக்கவேண்டியுள்ளதாக சங்கத்தின் தலைவரான சரத் விஜித குமார தெரிவித்தார்.

இந்த பிரச்னை இல்லாமல் தனியார் பஸ்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் கூறினார். (அ)

# நாணய நிதியம், உலக வங்கி அதிகாரிகளை நேரடியாக சந்திக்க தயாராகின்றார் பஸில்!

கொழும்பு, மார்ச் 01

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் ஏப்ரல் மாதம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், அவற்றின் வருடாந்த கூட்டத்தொடரை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதுடன் அதனிடையே நிதி அமைச்சர் அந்த நிறுவனங்களின் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சர் இதுவரை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அதிகாரிகளுடன் உத்தியோகபூர்வமற்ற முறையில் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாகவும், இதுவரை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இதனூடாக உதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



# சிவராத்திரி விரதம் எதற்காக கடைப்பிடிக்க வேண்டும்?

**இருபத்து நான்கு வருடங்கள் சிவராத்திரி விரதமிருந்தால் அவர்கள் சிவ கதி அடைவார்கள். அத்துடன் அவர்களின் 21 தலை முறைகளும் நற்கதி அடைந்து, முக்தியை அடைவது சத்தியம் என்கிறது புராணங்கள்.**

மாதந்தோறும் அமாவாசை நாட்களாகக் வழிபடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் கிருஷ்ண பட்ச தினத்தை இந்த தினமாகக் கடைபிடிக்கிறோம். இந்த நாளில் சிவன் கோயில்களுக்குச் சென்று ஈஸ்வரனை வழிபட்டால் மன அமைதி, வாழ்க்கையில் முன்னேற்றம், தீய சக்திகள் வேரோடு அகலுதல் போன்ற நன்மைகள் நமக்கு உண்டாகும்.

மாசி மாதத்தில் அமாவாசையில் இருந்து 14ஆவது சதுர்த்தசியன்று வருவது மகா சிவராத்திரி யாகும். இந்த நாளின் சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்த புராணம், பத்ம புராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகா சிவ ராத்திரி நாளில் விரதம் இருப்போருக்கு கிடைக்கும் மகத்துவங்கள் என்ன என்பது பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாசிமாதம் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் அம்பிகை சிவபெருமானை வணங்கியதாலேயே இந்த நாளில் மகா சிவராத்திரி கொண்டாடப்படுகிறது.

பிரளய காலத்தின் போது பிரம்மனும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்டநிலையில், இரவுப் பொழுதில் அம்பிகை உமாதேவி, பரமேஸ்வரனை நினைத்து பூஜை செய்தாள். நான்கு ஜாமங்களிலும் இரவு முழுவதும் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்தாள். பூஜையின் முடிவில் அம்பிகை ஈஸ்வரனை வணங்கி, அடியேன் தங்களைப் பூசித்த இந்த இரவை, தேவர்களும் மனிதர்களும் தங்கள் திரு நாமத்தாலேயே - அதாவது ஹசிவராத்திரி' என்றே கொண்டாட வேண்டும் என்று வேண்டினாள்.

சிவராத்திரி அன்று, சூரியன் மறைந்தது முதல் - மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை; தங்களை (சிவனை)ப் பூஜை செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களையும் தந்து முடிவில் மோட்சத்தை யும் அளிக்க வேண்டும். அருள் புரியுங்கள் என்று அன்னையானவள் வேண்டிக் கொண்டாள்..

சிவபெருமானும், அப்படியே ஆகட்டும் என்று கூறி அருள்புரிந்தார். அந்த இரவே ‘சிவராத்திரி’ என வழங்கப்பட்டு, அனைவராலும் கொண்டாடப்படுகிறது. பகல் பொழுது பரமேஸ்வரனுக்கும், இரவுப் பொழுது அம்பிகையான உமாதேவிக்கும் உரியது என்பது நியமம். ஆனால் சிவராத்திரி என்பது அம்பாளின் வேண்டுதலின் படி கொண்டாடப்படுவதால் அது சிவனுக்கு உரியதாயிற்று.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம்.

புராணங்களில் சொல்லப்பட்ட மற்றைய பல விரதங்களை நெடுங்காலம் கடை பிடிப்பது, நூறு அசுவமேத யாகம் செய்வது, பலமுறை கங்கா ஸ்நானம் செய்வது ஆகிய அனைத்தையும் மேற்கொண்டாலும், ஒரு சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்கு ஈடாகாது.

சிவராத்திரிக்கு முதல் நாள் ஒரு வேளை மட்டுமே உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி அன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, சூரிய உதயத்தின் போது காலையில் வீட்டில் செய்ய வேண்டிய பூஜையை முடிக்க வேண்டும். அதன் பின் சிவன் கோவிலுக்குப் போய் முறைப்படி தரிசனம் செய்ய வேண்டும். பூஜை செய்யும் இடத்தை மலர்களால் அலங்கரித்து நண்பகலில் குளித்து மாலையில் சிவார்ச்சனைக்கு உரிய பொருட்களோடு சிவன் கோவில் சென்று ஏற்பாடுகளைச் செய்யலாம். மாலையில் மீண்டும் குளித்து வீட்டில் சிவபூஜை செய்ய வேண்டும். வீட்டிலேயே இரவின் நான்கு ஜாமங்களிலும் முறைப்படிப் பூஜை செய்தலும் நலம். வில்வ இலைகளால் அர்ச்சனை செய்தல் கூடுதல் உத்தமம்.

மகா சிவ ராத்திரி விரதம் மேற்கொள்பவர்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பிரம்மச்சரியத்தைக் கடைபிடிக்க வேண்டும். சிந்தையில் அமைதியுடன் சிவ புராணத்தை பாடிக் கொண்டிருக்க வேண்டும். பற்றற்று இருப்பதுடன் பேராசைகளைக் கைவிட்டு பிறருக்குத் தீங்கிழைக்காமல் இருத்தல் வேண்டும்.

மாலையில் குளித்து உலர்ந்த ஆடையணிந்து நெற்றியில் திருவெண்ணீறு அணிந்து, கையில் உத்திராட்ச மாலையுடன் வீடுகளில் சிவ பூஜை செய்தோ அல்லது கோயில்களுக்குச் சென்றோ சிவனை வழிபடுதல் வேண்டும். கோயில்களிலும் சிவபூஜை செய்யலாம். ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்ற சொல்லை உச்சரித்து பூஜிக்க வேண்டும். கலச பூஜையுடன் லிங்கத்தை வைத்தும் பூஜை செய்யலாம். பூக்கள் மற்றும் அபிஷேகப் பொருட்களை கோயில்களுக்கு வாங்கிக் கொடுத்தல் நலம்.

பின்னர் சிவபெருமானின் வெவ்வேறு பெயர்களான பவ, சர்வ, ஈசான, பசுபதி, உக்ர, ருத்ர, பீமா மற்றும் மகாதேவா என்று கூறி பூஜிக்க வேண்டும். சிவ பெருமானின் சகஸ்ர நாமத்தை சொல்வதுடன், வில்வ இலைகளைக் கொண்டும் பூஜிக்கலாம். வில்வ இலைகளை கோயில்களுக்கும் வழங்கலாம்.

பின்னர் நைவேத்யம் படைத்து வழிபட வேண்டும். சிவ, ருத்ர, பசுபதி, நீலகண்டா, மகேஸ்வரா, ஹரிகேசா, விருபாக்ஷா, சாம்பு, சூலினா, உக்ரா,பீமா, மகாதேவா ஆகிய 12 பெயர்களை உச்சரித்து பூக்களால் அர்ச்சிக்க வேண்டும். கோயில்களில் பிரதட்சிணமாக வந்து சிவ பெருமானின் மூல மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்ய வேண்டும்.

அன்றையதினம் இரவில் நான்கு ஜாமங்களிலும் தூங்காமல் பூஜை செய்து, மறுநாள் விடியற்காலையில் நீராடி, காலை அனுஷ்டானத்துடன் உச்சிக்கால அனுஷ்டானத்தையும் அப்போதே முடிக்க வேண்டும். அதன் பின் தீட்சை தந்த குருவைப் பூஜை செய்து விட்டு, உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்கு தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

பூஜை செய்ய முடியாதவர்கள் நான்கு ஜாமத்திலும் சிவபுராணம் கேட்டும், சிவத்துதிகளைச் சொல்லியும், சிவன் கோயிலுக்குச் சென்று அவ்விரவைக் கழித்தும் சிவனை வழிபடலாம். சிவராத்திரிக்கு மறுநாள் சிவ புராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். பிறகு மாலை நெருங்கியதும் மாலை அனுஷ்டானங்களை முடித்து, அன்றிரவும் எதுவும் உண்ணாமல் இருந்து உறங்க வேண்டும்.

சிவராத்திரி தினத்தன்று முழு உபவாசத்தைக் கடைபிடித்தால் எம்பெருமான் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவதுடன் மகிழ்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும் அளிப்பார் என்பது ஐதீகம். தவிர மகா சிவ ராத்திரி விரதம் இருப்போருக்கு நற்கதி கிடைப்பதுடன் இப்பூத உடல் மடிந்த பின் சொர்க் கத்தையும் இறைவன் அளிப்பான் என்பதே பின்னணித் தத்துவம்.

இப்படி இருபத்து நான்கு வருடங்கள் சிவராத்திரி விரதமிருந்தால் அவர்கள் சிவகதி அடைவார்கள். அத்துடன் அவர்களின் 21 தலை முறைகளும் நற்கதி அடைந்து, முக்தியை அடைவது சத்தியம் என்கிறது புராணங்கள்.

**- மலர்**




# தலைமையில் இரண்டாம் இடத்தில் இருப்பதே போதும் என்று நினைக்கிறார் மாவை



## அடுத்த தமிழக தேர்தலில் ஸ்டாலினுக்கு முதன்மை எதிரி அண்ணாமலை!

கனடா டொரண்டோவிலிருந்து ஒரு நண்பர், மன்னிக்கவும் சகோதரர், என்னிடம் தொலைபேசியில் ஒரு கேள்வி கேட்டார். அவர் 'ஈழநாடு' பத்திரிகையின் இணையப் பதிப்பைத் தொடர்ந்து வாசிப்பவராம். "அண்ணா, சிட்னி பிரபாகரனின் வீடியோ எங்களைப் பார்க்க சொன்னீர்களே, நீங்கள் முழுதுமாக பார்த்தீர்களா? பார்த்தால், ஏன் இன்னும் சற்று அதை விரிவாக ஈழநாடு கட்டுரையில் விவாதிக்கலாமே?" என்றார். இடம் சார்ந்த கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்று விளக்கிவிட்டு, பெரும்பாலான வாசகர்கள் லண்டன் ரெலோ பொறுப்பாளர் சாம் சம்பந்தனைப் பேட்டி கண்ட அந்த வீடியோவைப் பார்த்திருப்பார்கள் என்று நான் யூகித்தேன் என்பதையும் கூறினேன்.

ஆனாலும், இந்தப் பேட்டியில் முக்கியமான அம்சங்களாக எனக்குத் தோன்றியவற்றை இங்கு கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய பல முக்கியமான வேலைகளைத் தனிச்சையாக எடுத்து செயல்பட்டார் என்ற முறையில் சுமந்திரன்மீது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரபாகரன் கேட்டபோது, சாமுக்கு தர்மசங்கடம் ஏற்பட்டது. நேரடியாக பதில் சொல்லாமல், சுமந்திரனின் தமிழ் அரசு கட்சிதான் இதுபற்றிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றார். அதேநேரம், சுமந்திரனின் அறிக்கைகளும் செயல்பாடுகளும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் மரியாதையைக் குலைக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொண்டார்.

இரா. சம்பந்தனுக்கு வயதாகிவிட்டது என்பதாலும் மாவை சேனாதிராஜா அரசியல் ரீதியாக வலுவானவர் இல்லை என்பதாலும் தமிழ் அரசு கட்சியில் சுமந்திரன் ஆதிக்கம் செலுத்துவதாகவும் சாம் தெரிவிக்கிறார். ஆகவே, தனக்கு எதிராகவே நடவடிக்கை எடுப்பதற்கு, சுமந்திரன் அனுமதிப்பார் என்று எப்படி சாம் எதிர்பார்க்கிறார்?

கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் உள்ளிட்ட தலைவர்கள் ஆகியோர் சுமந்திரனுக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டுமில்லையா? இதற்கும் சாம் ஒரு பதில் வைத்திருக்கிறார். தங்களது இளமைக்காலத்தில் ஈழப்போரில் உயிரையும் கொடுக்கத் துணிந்த இந்த மூத்த தலைவர்கள், தமிழ் ஒற்றுமையை இப்போது குலைக்க விரும்பவில்லை என்று சாம் கூறுகிறார். சுமந்திரனின் நடவடிக்கைகளையும் மீறி, ஓர் ஒற்றுமையான சூழலை நிலைநிறுத்த அவர்கள் முடிந்தவரையில் முயற்சி செய்கிறார்கள் என்று சாம் கூறுகிறார்.

1980களிலிருந்து இலங்கைத் தமிழ் அரசியலை கவனித்து வந்திருக்கிறேன் என்ற முறையில், மாவையார் அரசியல் ரீதியாக வலுவானவர் இல்லை என்றும், தலைமையில் இரண்டாம் இடத்தில் இருப்பதே போதும் என்று நினைக்கிறார் என்றும் பார்க்கிறேன். அஇஅதிமுகவில் இரண்டாவது இடத்தில் இருந்த நெடுஞ்செழியன், திமுகவில் நிரந்தரமாக இரண்டாம் இடத்தில் இருந்த அன்பழகன் ஆகியோருடன் மாவையாரை ஒப்பிடலாம். மாவை நல்லவர், அவ்வளவுதான்.

பிரபாகரன் - சாம் பேட்டியில் நான் குறிப்பிட விரும்பும் இரண்டாவது அம்சம், ஸ்டாலினைப் பாராட்டியும் ஈழத்தமிழ் பிரச்னையைத் தீர்க்குமாறு கோரிக்கை விடுத்தும் சுமந்திரன்-சுரேன் ஆகியோர் அனுப்பியிருக்கும் கூட்டறிக்கைக்கு சிங்கள அரசின் ஆதரவு இருந்தது என்கிறார். மாவீரர் தினக் கொண்டாட்டம் போன்ற தமிழ்தேசிய செயல்பாடுகளுக்கே காவல்துறையினர் தமிழர்களைக் கைது செய்துவரும் நிலையில், விடுதலைப்புலிகளுடன் தொடர்பு இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கொழும்பினால் தடைசெய்யப்பட்ட லண்டனின் 'ஜிரிஎவ்' அமைப்பைச் சேர்ந்த சுரேனுடன் கைகோத்ததற்காக சுமந்திரன் மீது ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சாம் கேட்கிறார்.

மூன்றாவது அம்சம், தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியலில் சுமந்திரனின் திடீர் முன்னேற்றத்துக்கு சாம் சொல்லும் காரணம். கடந்த பல வருங்களாக, நல்ல ஆங்கிலப் புலமையும் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடிய திறனும் உள்ளவர்கள், மூத்த தலைவர்களை விடவும் வேகமாக முன்னேறுவதுதான் வழக்கமாகிவிட்டது என்கிறார். அது உண்மைதானே? அந்த உண்மை கசப்பானது என்பதும் நிஜம்தானே?

கல்வியறிவு வேறு, விவேகம் வேறு. கல்வியறிவு கொண்டவர்கள் எல்லோரும் விவேகமானவர்கள் அல்லர், விவேகம் உடையோர் எல்லோரும் பல்கலைக் கழகக் கல்வி பெற்றவர்களும் அல்லர். இவை இரண்டையும் விட முக்கியமானது நாட்டுப்பற்று.

அடுத்ததாக, நான் ஏற்கனவே கூறியபடி, நடந்து முடிந்த தமிழக உள்ளாட்சித் தேர்தலைப் பற்றிய விவரங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலினும் அவரது திமுகவும் சென்ற ஆண்டு மே மாதம் சட்டமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றிருக்கின்றனர். பெரும்பாலான ஊராட்சித் தேர்தல்களில் திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றன. இப்போது, பெப்ரவரி 19ஆம் திகதி நடந்த தேர்தலிலும் இந்தக் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. "தமிழகத்தின் மாபெரும் கட்சியாகத் திகழ்ந்த அ.இ.அ.தி.மு.க. கடந்த சட்டசபைத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலை அடுத்து, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும் படுதோல்வி அடைந்தது. கழுதை தேய்ந்து கட்டெறும்பு என ஆகியுள்ளது" என்று, தேர்தல் முடிவுகளைப் பற்றிக் குறிப்பிட்ட எனக்குப் பிடித்த நாளிதழான 'தினமலர்' பெப்ரவரி 23ஆம் திகதி எழுதியது.

ஒரு மாநகராட்சியைக் கூட அண்ணா திமுகவால் கைப்பற்ற முடியவில்லை. சென்னை மாநகராட்சி உட்பட மொத்தம் உள்ள 21 மாநகராட்சிகளையும் ஆளும் திமுக அள்ளிவிட்டது. நகராட்சி, பேரூராட்சிகளிலும் திமுக அமோக வெற்றிபெற்றுள்ளது. தனித்துப் போட்டியிட்ட பா.ஜ.க. தமிழகத்தில் தலையெடுக்கத் துவங்கியுள்ள நிலையில்,



கமல் கட்சி காணாமல் போனது. "தி.மு.க. -அ.தி.மு.கவுக்கு மாற்று நானே" என்று சொன்ன சீமானின் கட்சி, பேரூராட்சியில் மட்டும் ஆறே இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

"ஒன்பது மாத திமுக ஆட்சிக்கு மக்கள் வழங்கிய நற்சான்றுதான் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வெற்றி" என முதல்வர் ஸ்டாலின் கூறினார். மேலும் அவர், "தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள திராவிட மாடல் ஆட்சிக்கு மக்கள் தந்த அங்கீகாரம்" என்றும் தெரிவித்தார்.

அ.இ.அ.தி.மு.கவின் மிகப் பெரிய அதிர்ச்சி என்னவென் றால், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலம் முதலே அதிமுகவின் கோட்டை என்று சொல்லப் பட்ட வடமேற்குத் தமிழகத்தில் உள்ள கொங்கு மண்டலத்தில் அவர்கள் முழுவதுமாக தோல் வியை சந்தித்திருக்கிறார்கள். சொல்லப்போனால், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி யின் தொகுதியில் அவர்களால் ஒரு வார்டில்கூட வெற்றிபெற முடியவில்லை. துணைமுதல்வர் ஓ பன்னீர் செல்வத்தின் தொகுதியான போடி நாயக்கனூரிலும் இதே நிலைதான். சென்னை ராயப்பேட்டையில் உள்ள அவ்வை ஷண்முகம் சாலையின் அ.இ.அ.தி.மு.க. தலைமையகம் வெறிச் சோடிக் காணப்படுகிறது. எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதாவின் புகழ் கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்த காலத்தில் அந்த சாலையில் கட்சிக்காரர்களின் கூட்டமும் கார்களும் அங்கு வசிப்பவர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது.

கொங்கு மண்டலத்தில் அ.தி.மு.கவின் தோல்விக்கு, மாநில மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் கூர்மையான திட்டமிடலும் கடும் உழைப்பும் காரணமாக சொல்லப்படுகிறது. ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் அதிமுகவின் அமைச்சராக இருந்த இவர், அவரது மறைவுக்குப் பிறகு சசிகலா-டி.டி.வி தினகரனின் அ.ம.மு.கவில் இணைந்தார். பிறகு டிசம்பர் 2018இல் தி.மு.கவில் சேர்ந்தார். பாலாஜியின் குழுவினர் வாக்காளர்களுக்கு அதிகமான பணமும் பொருட்களும் கொடுத்து வாக்கு சேகரித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தங்களுடைய தலைமையைக் குறித்து அ.தி.மு.க. தொண்டர்கள் கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். யார் இந்த சரிவுக்குப் பொறுப்பு என்ற கேள்வியும் அவர்களால் பரவலாக எழுப்பப்படுகிறது. மின்னணு வாக்கு இயந்திரம், தி.மு.க. வாக்குக்காக காசு கொடுத்தது, எதிர்க்கட்சியினரை ஆளும் கட்சியான தி.மு.க. காவல் துறையினர் மூலம் மிரட்டியது ஆகியவைதான் தோல்விக்குக் காரணங்கள் என்று அ.தி.மு.க. தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் சாதாரண குடிமக்கள், அ.தி.மு.க. வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதையும் அறிந்தவர்கள் என்பதால் இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தனியாகப் போட்டியிட்டாலும் பாஜக நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பது இந்தத் தேர்தலின் இன்னொரு முக்கிய அம்சம். தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் பாஜக ஆதரவுக் கட்சியான அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பா.ஜ.கவை கழற்றிவிட்டது. தொகுதிப் பங்கீட்டில் முரண்பாடு ஏற்பட்டதால் இந்த விலகல் நடந்தது என்றாலும், மத்தியில் ஆளும் காவிக்கட்சியான பா.ஜ.கவின் 'பி ரீம்' என்று அதிமுகவின் மீது எழுந்துள்ள பெயரை மாற்ற அந்தக் கட்சித் தலைவர்கள் நினைத்திருக்கக்கூடும். அ.இ.அ.தி.மு.க. பாமகவையும் கூட்டணியிலிருந்து விலக்கிவிட்டது. காங்கிரஸில் ஜாம்பவானாக இருந்த மூப்பனாரின் மகன் ஜி.கே வாசன் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் போன்ற சிறு கட்சிகளோடு கூட்டணி வைக்கவேண்டிய நிலைக்கு அ.தி.மு.க. தள்ளப்பட்டிருக்கிறது.

இன்னொரு புறம் திமுக தன்னுடைய



- பகவான் சிங் -
தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

கூட்டணியில் இறுக்கமாக இருந்தது. வைகோவின் ம.தி.மு.க, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், இஸ்லாமியக் கட்சிகள் போன்ற கூட்டணிக்கட்சிகள் இணைந்து வெற்றிக்குப் பங்களித்தன.

பா.ஜ.கவின் மாநிலத் தலைவரான அண்ணாமலையைப் பொறுத்தவரை, 2026 சட்டமன்றத் தேர்தலில் பாஜக ஒரு முக்கியக் கட்சியாகப் போட்டியிடும் என்று கூறிவருகிறார். அவருக்கு உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள், குறிப்பாக நகராட்சித் தேர்தல் முடிவுகள் பெரிய உற்சாகத்தை அளிக்கக்கூடும். தேர்தல் முடிவுகள் வந்தபின்னர், "அது என்ன திராவிட மாடல்? பணமும் பரிசும் கொடுத்து வாக்கு சேகரிப்பதும் எதிர்த்துப் போட்டியிடுபவர்களை மிரட்டுவதும்தான் திராவிட மாடலா?" என்று ஸ்டாலினின் திராவிட மாடல் நிர்வாகம் பற்றி விமர்சிக்கும்விதமாக ஊடகங்களில் அண்ணாமலை கேள்வி எழுப்பினார்.

கன்னியாகுமரி, கோவை, மதுரை மற்றும் சென்னையில் சில பகுதிகள் என, திராவிட மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே ஆதரவு பெற்றிருந்த பாஜக தொடர்ந்து முன்னேறிவருகிறது என்பதால் அவரது மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளலாம். ஈ.பி.எஸ், ஓ.பி.எஸ், கமல் ஹாசன், சீமான் என ஒவ்வொரு விக்கெட்டாக விழுந்துகொண்டிருக்கும் நிலையில், 2026 களத்தில் ஸ்டாலினுக்கு முதன்மை எதிரியாக அண்ணாமலை எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தினக்குரல்



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

51) வெப்பம் விரைவாகப் பயணிப்பது
(1) உலோகங்களில் (2) பலகைகளில் (3) பிளாத்திக்குகளில்

52) கோள் மண்டலத்தில் மூன்றாவதாக காணப்படும் கோள்
(1) செவ்வாய் (2) பூமி (3) வெள்ளி

53) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அழைக்க வேண்டிய தொலைபேசி எண்
(1) 119 (2) 1929 (3) 1919

54) நீர்ப்பிரசாசைப் பயன்படுத்துபவர்கள்
(1) உழவர் (2) கொத்தன் (3) மேசன்

55) ஊசிதுளைக் கமராவில் தோன்றும் விம்பம் எப்படியானது?
(1) நிமிர்ந்த விம்பம் (2) தலைகீழான விம்பம் (3) தெளிவற்ற விம்பம்

56) மலட்டுத்தன்மை எப்போசனைக்குறைபாட்டால் ஏற்படுகின்றது.
(1) விற்றமின் C (2) விற்றமின் D (3) விற்றமின் E

57) கடல் நீரிலிருந்து கறியுப்பை வேறாக்கும் செயன்முறை இடம்பெறும் இடம்
(1) சுரங்கம் (2) உப்பளம் (3) பட்டளம்

58) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகம் எது?
(1) கடிதம் (2) சுவரொட்டி (3) மின்னஞ்சல்

59) தேசப்படத்தில் E என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் வீதி வகை.
(1) பெருந்தெரு (2) அதிவேக நெடுஞ்சாலை (3) சிறுவீதி

60) “பிராணிகளிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ளும் படிப்பினை” எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. ..............................................................................................

..............................................................................................


2. ..............................................................................................


..............................................................................................

3. ..............................................................................................


..............................................................................................

- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1.

(1) (2) (3)

2.

(1) (2) (3)

3. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?


உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4

### விடைகள்

51) 1
52) 2
53) 2
54) 1
55) 2
56) 3
57) 2
58) 3
59) 2

1. (2) 2. (1) 3. (2)



கல்வி tv CHANNEL-1

**21.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**21.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## நிந்தவூர் பிரதேச சபையின் 47ஆவது அமர்வு நடைபெற்றது

நிந்தவூர், மார்ச் 01

அம்பாறை - நிந்தவூர் பிரதேச சபையின் 2022 பெப்ரவரி மாதத்துக்கான சபையின் 47ஆவது அமர்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம். ஏ. எம். தாஹிர் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்ற அமர்வில் 2022 ஜனவரி மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல், கணக்கறிக்கை உறுதிப்படுத்தல் தவிசாளர் எம் .எ . எம் தாஹிர் உரை என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து, நிந்தவூர் பகுதியில் எல். டி. எஸ். பி. வேலைத்திட்டம் தொடர்பில் உறுப்பினர்களின் கருத்துக்கள் சபையில் தவிசாளரால் கேட்கப்பட்டது. அத்துடன், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடிதங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு இறுதியாக சபை நடவடிக்கை முடிவுக்கு வந்தது. (ஐ)

# இன்னோர் இனத்தை அடக்கி ஒடுக்க பயங்கரவாத சட்டம் பயன்படக்கூடாது!

### கருணாகரம் எம். பி.

மட்டக்களப்பு, மார்ச் 01

பயங்கரவாத தடை சட்டமானது இந்த நாட்டின் அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அது இன்னோர் இனத்தை அடக்கி ஒடுக்கும் சட்டமாக இருக்கக்கூடாது - என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்ற பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தில் பங்குபற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும், பயங்கரவாத தடைச்சட்டமானது தமிழர்களை அடக்கி ஒடுக்கு வதற்காக கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும் 1979ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே தற்காலிகமாகவே கொண்டுவரப்பட்டது.

1977ஆம் ஆண்டு தேர்தலிலே தமிழீழத்துக்கான ஆணையைக் கேட்டு வென்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மக்கள் பிரதிநிதிகள்கூட இந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை என்ற விமர்சனம் தற்போதும் இருந்துகொண்டிருக்கின்றது. நாங்கள் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென்றே போராடுகிறோம்.

சுதந்திரமடைந்த காலம் முதல் இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்படுகின்றனர். அந்த வகையில் எமது தலைவர்கள் அகிம்சைப் போராட்டம் நடத்தி அடி, உதைபட்டார்கள். எமது இளைஞர்கள் வீறுகொண்டு எழுந்தநேரம் அவர்களை அடக்கி ஒடுக்கலாம் என்ற நோக்கத்தில் கொண்வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டமானது இன்றும் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றது.

ஒருகாலத்தில் தமிழ் மக்கள் மாத்திரம்தான் பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், கடந்த சில வருடங்களாக குறிப்பாக ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்பு பெரும்பாலான முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டில் எண்ணிக்கையின் அடிப்படையில் சிறுபான்மையினராக இருக்கும் எம்மை அடக்கி ஒடுக்கும் ஒரு சட்டமாகவே நான் இதனை பார்க்கின்றேன்.

அந்த வகையில் இந்தச் சட்டமானது இந்த நாட்டின் அரசப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். நாங்கள் மாத்திரமல்ல ஐரோப்பிய ஒன்றியம் ஏகமனதாக இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அதாவது இன்னோர் இனத்தை அடக்கி ஒடுக்கும் சட்டமாக இது இருக்கக்கூடாது - என்றார். (ஐ)

# எரிபொருள்கள் விலையேற்றத்தால் பாதிப்புகளை எதிர்கொள்கிறோம்!

### தோப்பூர் விவசாயிகள் கவலை

திருகோணமலை, மார்ச் 01

திருகோணமலை, தோப்பூர் பிரதேச விவசாயிகள் எரிபொருள் விலையேற்றத்தால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவித்தனர்.

ஏற்கனவே ஓர் ஏக்கருக்கு அறுவடை இயந்திரக் கூலி 6,500 ரூபாய் தொடக்கம் 7,000 ரூபாய் கொடுத்ததாகவும் தற்போது எரிபொருளுக்கான விலை அதிகரித்தமையால் அறுவடை இயந்திரக் கூலி ஏக்கருக்கு 9,000 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இதற்கு முன்னர் ஏக்கருக்கு சுமார் 30 மூடை நெல் அறுவடை மூலம் கிடைத்தன. ஆனால், இம்முறை யூரியா பசளை இல்லாமையால் விளைச்சல் குறைவடைந்து ஏக்கருக்கு 5 தொடக்கம் 10 மூடைகள் நெல்லே கிடைக்கிறது. இதனிடையே எரிபொருள் விலையேற்றத்தால் தாம் மேலும் பாதிக்கப்படுகின்றனர் என்று தோப்பூர் விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ)



# நற்பிட்டிமுனை - கிட்டங்கி வீதி; பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

### கல்முனை மாநகர மக்கள் கோரிக்கை

கல்முனை, மார்ச் 01

கல்முனை மாநகருக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை - கிட்டங்கி பிரதான வீதியில் ஒழுங்குமுறை பேணப்படாமை, சீரற்றுள்ள பாதையோரங்கள் என்பவற்றால் பாதசாரிகள் சிரமப்படுவதுடன் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

அத்துடன், வீதியின் இரு மருங்கிலும் உள்ள சில மரங்களின் கிளைகள் உடைந்து விழும் நிலையிலுள்ளன. இதனால், இந்த வீதியைப் பயன்படுத்துவோர் ஆபத்தின் மத்தியில் பயணிக்கின்றனர். எனவே பொது மக்கள் நலன்கருதி வீதிக்கு மேலாக வரும் கிளைகள் வெட்டியகற்றப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், இது குறித்து உரிய வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலும், வீதியின் இருமருங்கிலும் உள்ள வடிகான்களுக்கு மேலாக இடப்படும் கொங்கிறீட் மூடிகள் முறையாக போடப்படாமையால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெண் அரசியல், செயல்பாட்டாளர்களின் டிஜிற்றல் அறிவை மேம்படுத்த செயலமர்வு!

அக்கரைப்பற்று, மார்ச் 01

பிரதேச மட்ட அரசியலில் ஈடுபடும் பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயல்பாட்டாளர்களின் டிஜிற்றல் அறிவை மேம்படுத்துவதற்கான “ஜனனி“ திட்டத்தை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு ) தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னெடுத்து வருகின்றது.

முதல் கட்ட நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில், கபே அமைப்பின் தேசிய நிறைவேற்று பணிப்பாளர் அஹமட் மனாஸ் மக்கீன் அவர்களின் நெறிப்படுத்தலில் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ் இணைப்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டிஜிற்றல் கல்வியறிவை மேம்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் ஊடக கோட்பாடுகள், ஊடக சந்திப்புக்களில் உரையாற்றுகின்ற விதம் மற்றும் தகவல் அறியும் சட்டம், இணையவழி வன்முறைகளை தொழில்நுட்ப ரீதியாக எவ்வாறு முகம் கொடுப்பது என்பன பற்றியும், இணையவழி வன்முறைகளுக்கு முகம் கொடுக்கின்றபோது, அவற்றை சட்ட ரீதியாக எவ்வாறு எதிர்கொள்வது பற்றும் வளவாளர்களால் தெளிவுபடுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில், பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெண் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் பங்கேற்றனர். (ஐ)




# பண்டகசாலை நிர்வாகம் தொடர்பில் செயலமர்வு!

கல்முனை, மார்ச் 01

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கான களஞ்சியசாலை நிர்வாகம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கணக்காளர் உசைனா பாரிஸ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கணக்காய்வு திணைக்களத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் எச். எம். எம். றசீட் வளவாளராகக் கலந்து கொண்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பிரிவிலுள்ள வைத்தியசாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ஐ)



# ஐந்தாவது நாளாகவும் நேற்று உக்ரைனில் உக்கிர தாக்குதல்

## தலைநகர் உட்பட பல இடங்களில் சண்டை

கீவ், மார்ச் 01

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் நேற்று 5 ஆவது நாளாவும் தொடரும் நிலையில் தலைநகர் கீவ்வின் புறநகர் பகுதிகளில் கடும் சண்டை இடம்பெற்று வருகிறது.

அத்துடன், கீவ் உட்பட பல நகரங்கள் ரஷ்யப் படைகளில் தாக்குதலுக்கு முகம் கொடுத்துள்ளன. நேற்று திங்கட்கிழமை அதிகாலை முதலே தலைநகர் கீவ்வில் குண்டு தாக்குதல் எச்சரிக்கை ஒலிகள் எழுப்பட்டு, எச்சரிக்கை நீடிக்கப்பட்டது. இதனால் நகர வாசிகள் பலர் தொடர்ந்து பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

உக்ரைன் தலைநகரின் புறநகர் பகுதியில் ரஷ்ய துருப்புக்களின் ஊடுருவல் முயற்சியை முறியடித்து உக்ரைன் படைகள் கடும் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

அழையா விருந்தாளிகளிடம் இருந்து எங்கள் வீட்டைப் பாதுகாக்க முடியும் என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டிவருகிறோம் என உக்ரைன் ஆயுதப் படைகளின் தளபதி கேணல் ஜெனரல் அலெக் சாண்டர் சிர்ஸ்கி நேற்று காலை வெளியிட்ட அறிக்கையில் கூறினார்.



இதற்கிடையில் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்ட வீடியோ காட்சிகள் செர்னிஹிவில் உள்ள குடியிருப்பு கட்டடங்கள் தீப்பிடித்து எரிவதைக் காட்டின. கிழக்கில் உள்ள கார்கிவ் நகரிலும் வெடிப்புகள் பதிவாகியுள்ளன. (அ)



## ரஷ்யாவுக்கு ஆதரவாக உக்ரைனுக்கு படை அனுப்ப தயாராகும் பெலாரஸ்!

மின்ஸ்க், மார்ச் 01

ரஷ்யாவுக்கு ஆதர வாக உக்ரைனுக்குள் படைகளை அனுப்ப அண்டை நாடான பெலாரஸ் தயாராகி வருவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படைகளை அனுப்புவதற்கு பெலாரஸ் திட்டமிட்டிருப்பதாக வொஷிங்டன் போஸ்ட் தெரிவித்துள்ளது. எனினும் இதனை பெலாரஸ் இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யவில்லை.

உக்ரைன் வடக்கு எல்லையில் உள்ள பெலாரஸ் ரஷ்யாவின் நீண்ட கால நட்பு நாடு. இரு நாடுகளும் இணைந்து அண்மையில் மிகப் பெரிய இராணுவப் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தன.

இவ்வாறிருக்க, உக்ரைனுக்குள் படைகளை அனுப்ப மாட்டோம் என பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோ உறுதியளித்ததாக உக்ரைன் ஜனாதிபதி வோலோதிமிர் ஸெலன்ஸ்கி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



## ஸ்கொட்லாந்தில் 2 ஆண்டுகளின் பின் கோவிட் கட்டுப்பாடு முற்றாக நீக்கம்!

எடின்பேர்க், மார்ச் 01

முதல் கோவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு, ஸ்கொட்லாந்தில் அதிகமான கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பாடசாலை மாணவர்கள் இனி வகுப்பறையில் முகக் கவசங்களை அணிய வேண்டியதில்லை. ஆனால் அவர்களுக்கு பாடசாலை வெளிப்புற பகுதிகளில் முகக்கவசம் தேவைப்படும்.

அத்துடன், தடுப்பூசி கடவுச்சீட்டு திட்டத்தை செயற்படுத்த பெரிய இடங்களின் சட்ட தேவையும் முடிவுக்கு வருகிறது.

மேலும், தன்னார்வத் திட்டத்தை இயக்க விரும்பும் வணிகங்களுக்கு செயலி நேரலையில் இருக்கும்.

முகக்கவசம் அணிவது உட்பட ஸ்கொட்லாந்தில் மீதமுள்ள அனைத்து சட்டப்பூர்வ கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளும் மார்ச் 21ஆம் திகதி நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தடுப்பூசிகள், சிகிச்சைகள் மற்றும் நல்ல பொது சுகாதார நடத்தைகளை நம்பி, ஸ்கொட்லாந்து சட்டக் கட்டுப் பாடுகளிலிருந்து விலகிச் செல்லும் என்று முதலமைச்சர் நிக் கோலா ஸ்டர்ஜன் தெரிவித்துள்ளார். (அ)

# உக்ரைனுக்கு மேலும் உதவி வழங்குகிறது கனடா அரசு

## ரஷ்ய விமானங்கள் வான்பரப்பில் பறக்கவும் தடை

ஒட்டாவா, மார்ச் 01

கனடா வான் பாதுகாப்பு எல்லையில் ரஷ்ய விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உக்ரைனுக்கான கூடுதல் உதவிகளை வழங்க கனடா மத்திய அரசு உறுதி அளித்துள்ளது.

ரஷ்ய அனைத்து விமானங்களுக்கும் கனடாவின் வான்வெளி மூடப்படும் என கனடா போக்குவரத்து அமைச்சர் ஒமர் அல் காப்ரா கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். உக்ரைனுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ரஷ்யாவை நாங்கள் பொறுப் பேற்க செய்யவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, செக் குடியரசு, போலந்து, பல்கேரியா, ஸ்லோவேனியா, எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா, ருமேனியா மற்றும் லக்சம்பேர்க் உள்ளிட்ட நாடுகள் ரஷ்ய விமானங்கள் நுழைவதற்கு தங்கள் வான் வெளி எல்லைகளை மூடியுள்ள நிலையில் கனடாவும் இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது. ரஷ்யாவின் முதன்மை விமான நிறுவனமான ஏரோபிளொட் கனடா வான்வெளி ஊடாக அமெரிக்கா பிற நாடுகளுக்கான பல விமான சேவைகளை ஒரு நாளில் இயக்குவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உக்ரைன் துணைப் பிரதமரின் வேண்டுகோளின் பேரில் 25 மில்லியன் டொலர் மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்களை உக்ரைனுக்கு கனடா அனுப்பவுள்ளதாக வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். பாதுகாப்பு தலைக்கவசங்கள், உடல் பாதுபாப்பு கவசம், எரிவாயு தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் கவசங்கள் மற்றும் இரவு பார்வை கருவிகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

இந்த உபகரணங்கள் உக்ரைனுக்கு கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்ய கனடா போலந்துடன் இணைந்து செயல்படுகிறது என ஜோலி கூறினார். மேலும் பல உதவிகளை நாங்கள் மேலும் அனுப்புவோம் எனவும் அவர் குறிப்பிட்டார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவை இலக்குவைத்து தனது நட்பு நாடுகளுடன் இணைந்து கனடாவும் தடை விதித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதலை அடுத்து ரஷ்யா மீது விதிக்கப்பட்டு வரும் பொருளாதாரத் தடைகளின் மற்றொரு பகுதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரஷ்ய வங்கிகளை நிதி தகவல் சேவையான ஸ்விப்டில் இருந்து அகற்றும் தீர்மானத்துக்கும் அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளுடன் இணைந்து கனடாவும் ஆதரவளிக்கும் என பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கூறினார்.

ஏற்கனவே கனடா சுமார் 33,000 உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சி அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போர் விமானங்களை வீழ்த்த உக்ரைனுக்கு ஏவுகணைகள்!

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், மார்ச் 01

ரஷ்யாவுடனான போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு பல்வேறு நாடுகளும் ஆயுத உதவி மற்றும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றன.

உக்ரைனுக்கு ஆயுதங்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்படும் என்று ஜேர்மனி நேற்று முன் தினம் அறிவித்திருந்தது. இந்நிலையில் முதன்முறையாக உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது. உக்ரைனுக்கு உதவும் வெள்ளை மாளிகையால் அங்கீகரிக்கப்பட்ட தொகுப்பின் ஒரு பகுதியாக போர் விமானங்களை எதிர் கொள்ளும் அதிவேக ஏவுகணைகளை நேரடியாக வழங்க அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

அந்த ஆயுதங்களை உக்ரைனுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏவுகணைகள் ராணுவ ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானங்களை சுட்டு வீழ்த்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்களை வழங்குமாறு உக்ரைன் கேட்டுள்ள நிலையில் அமெரிக்கா ஏவுகணைகளை வழங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, உக்ரைனுக்கு 3 ஆயிரம் இயந்திர துப்பாக்கிகள், மற்றும் ராணுவ தாங்கிகளை எதிர்க்கும் 200 கையெறி ஏவுகணைகளை வழங்குவதாக பெல்ஜியம் அறிவித்துள்ளது.

இதற்காக பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டி க்ரூவிற்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார். மேலும் ரஷ்ய விமானங்களுக்கு அனுமதி மறுத்த போர்த்துக்கல் நாட்டுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார். (அ)



## இலங்கை வீரர்கள் பயணித்த பஸ்ஸில் தோட்டாக்கள் மீட்பு!


சண்டிகார், மார்ச் 01

சண்டிகாரில் ஹோட்டலில் தங்கியிருந்த இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்தில் இருந்து இரண்டு வெற்று துப்பாக்கி தோட்டக்களை சண்டிகார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த ஹோட்டலில் தங்கியிருந்த இலங்கை வீரர்கள் சனிக்கிழமையன்று பேருந்தில் ஏற முற்பட்ட போது இந்த வெற்றி துப்பாக்கி தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கிரிக்கெட் வீரர்களை ஏற்றிச் செல்வதற்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு திருமண விழாவில் இந்த பேருந்து பயன்படுத்தப்பட்டதாகவும், குண்டுகள் அந்த திருமண நிகழ்வுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் சண்டிகார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் இது தொடர்பில் பேருந்து சாரதியிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



## மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் வீரர் காலமானார்!

ஜமைக்கா, மார்ச் 01

1950களில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராகவிருந்த சோனி ரமதின் காலமானார்.

சுழல்பந்து வீச்சு ஜாம்பவானகத் திகழ்ந்த இவர் தனது 92 ஆவது வயதில் காலமானார் என்று ஐ.சி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

வலது கை சுழல்பந்து வீச்சாளரான ரமதின் , தனது பந்துவீச்சு நடவடிக்கையில் எந்த பெரிய மாற்றமும் இல்லாமல் முக்கியமக ஓவ் - ஸ்பின் மற்றும் லெக்-ஸ்பின் ஆகிய இரண்டையும் வீசும் திறனைக் கொண்டிருந்தார். இதனால் எதிரணி துடுப்பாட்ட வீரர்கள் அவரின் பந்து வீச்சை கணிக்க முடியாதிருந்தது.

அவர் 43 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 28.98 சராசரியில் 158 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். மேலும் ரமதின் 184 முதல்தர போட்டிகளில் விளையாடி 20.24 சராசரியில் 758 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

### இந்தியாவுடனான ரி - 20

# தொடரை முழுமையாக இழந்தது இலங்கை அணி!

தர்மசாலா, மார்ச் 01

இலங்கைக்கு எதிராக தர்மசாலாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கடைசி சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட்களால் வெற்றிபெற்ற இந்தியா இருபது - 20 தொடரை முழுமையாக வெற்றி கொண்டது.

இந்திய வீரர்களின் கட்டுப்பாட்டான பந்துவீச்சுகளும் ஷ்ரேயாஸ் ஐயர் குவித்த 3ஆவது தொடர்ச்சியான அரைச்சதமும் இந்தப் போட்டியில் இந்தியாவுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தன. இலங்கை அணித் தலைவர் தசுன் சானக தனி ஒருவராகப் பிரகாசித்து அதிரடியாகக் குவித்த அரைச்சதம் வீண்போனது.

கடைசிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய பந்து வீச்சாளர்களை எதிர்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்ட இலங்கை, 13ஆவது ஓவரில் 5ஆவது விக்கெட்டை இழந்தபோது 60 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. தனுஷ்க குணதிலக (0), பத்தும் நிசங்க (1), சரித் அசலங்க (4), ஜனித் லியனகே (9), தினேஷ் சந்திமால் (22) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

ஆனால், அதன் பின்னர் களமிறங்கிய தசுன் சானக தனி ஒருவராக அதிரடியில் இறங்கி 38 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணி கௌரவமான நிலையை அடைய உதவினார். சாமிக கருணாரட்ண 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். அவர், தசுன் சானகவுடன் பிரிக்கப்படாத 6 ஆவது விக்கெட்டில் 47 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.



இந்தியாவின் பந்துவீச்சில் ஆவேஷ் கான் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா, 16.5 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று மிக இலகுவாக வெற்றிபெற்றது.

மொத்த ஓட்டம் 6 ஓட்டங்களாக இருந்தபோது அணித் தலைவர் ரோஹித் சர்மா (5) ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து சஞ்சு சாம்சன் 15 ஓட்டங்களுடன் தீபக் ஹூடா (21), வெங்கடேஷ் ஐயர் (5) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஆனால், மறு முனையில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய ஷ்ரேயாஸ் ஐயர் 45 பந்துகளை எதிர்கொண்டு 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களைப் பெற்று இந்தியாவின் வெற்றியை உறுதிசெய்தார். ரவீந்திர ஜடேஜா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இலங்கை பந்துவீச்சில் லஹிரு குமார 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

கடைசி போட்டியின் ஆட்டநாயகனான ஷ்ரேயாஸ் ஐயர், தொடர்நாயகன் விருதையும் வென்றெடுத்தார். இந்தத் தொடரில் அவர் 3 போட்டிகளிலும் முறையே 57, 74, 73 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நியூசிலாந்துடனான டெஸ்ட்

## தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசம்!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 01

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் தோல்வியடையும் நிலையில் உள்ளது நியூசிலாந்து அணி.

நான்காம் நாள் முடிவில் அந்த அணி, 2ஆவது இனிங்ஸில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 94 ஓட்டங்களைஎடுத்துள்ளது.

கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடியசெய்த தென்னாபிரிக்க அணி, 133 ஓவர்களில் 364 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. எர்வீ 108 ஓட்டங்கள் எடுத்தார். மேட் ஹென்றி 3 விக்கெட்களையும் வோக்னர் 4 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் 80 ஓவர்களில் 293 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. மிற்செல் 60, காலின் டி கிராண்ட்ஹோம் 120 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

ரபாடா 5 விக்கெட்களையும் யான்சென் 4 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள்.

தென்னாப்பிரிக்க அணி 2ஆவது இனிங்ஸிலும் சிறப்பாக விளையாடி 100 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 354 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

விக்கெட் காப்பாளர் கைல் வெர்ரீன் 136 ஓட்டங்களும் ரபாடா 47 ஓட்டங்களும் எடுத்தார்கள். இதனால் 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை வெல்ல நியூசிலாந்து அணிக்கு 426 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அந்த அணி 4ஆம் நாள் முடிவில் 42 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 94 ஓட்டங்களுடன் தடுமாறி வருகிறது. கொன்வே 60 ஓட்டங்களுடனும் ரொம் பிளெண்டல் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளார்கள்.

ரபாடா, மஹாராஜா தலா 2 விக்கெட்களை எடுத்துள்ளார்கள். 2ஆவது டெஸ்டில் வெற்றி பெற நியூசிலாந்து அணிக்குக் கைவசம் 6 விக்கெட்கள் மீதமுள்ள நிலையில் 332 ஓட்டங்கள் எடுக்க வேண்டியுள்ளது. இதனால் கடைசி நாளில் இந்த டெஸ்டை வென்று டெஸ்ட் தொடரை 1-1 என சமன் செய்வதற்கான வாய்ப்பு தென்னாப்பிரிக்க அணிக்கு அதிகமாக உள்ளது.



## பஞ்சாப் அணியின் தலைவராக மயங்க்!

பஞ்சாப், மார்ச் 01

பஞ்சாப் கிங்ஸ் அணியின் புதிய அணித் தலைவராக மயங்க் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2021 ஐ. பி. எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணி 6ஆம் இடத்தைப் பிடித்தது. 2020, 2019 ஆண்டுகளிலும் இதே இடத்தையே அந்த அணி பிடித்தது. கடந்த வருடம் பஞ்சாப் அணியின் தலைவராக இருந்த கே. எல். ராகுல் இந்த வருடம் லக்னோ அணியில் இடம்பெற்று அந்த அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் புதிய தலைவராக கர்நாடக வீரர் மயங்க் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பு நேற்று வெளியானது. 2018ஆம் ஆண்டு முதல் அந்த அணியில் மயங்க் அகர்வால் இடம்பெற்று அதிக ஓட்டங்களைக் குவித்து வருகிறார். ஐ. பி. எல். ஏலத்தில் ஷிகர் தவன், ஜொன்னி பெயர்ஸ்ரோ ஷாருக் கான், ரபாடா ஆகிய முக்கியமான வீரர்களை பஞ்சாப் அணி எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கல்வித்துறையில் மாற்றம் வேண்டும்!

## அனுரகுமார வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 01**

**நெறிமிக்க சமூகத்தை உருவாக்குவதற்கு கல்வியே முக்கிய காரணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



எம்பிலிபிட்டியவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிக்விக்கையில்-

எனவே, பிள்ளைகள் முன்கூட்டியே பாடசாலையை விட்டு வெளியேறுவதை நிறுத்தவேண்டும். அதே நேரத்தில் படிப்பை முடிக்கச் செலவிடும் காலத்தையும் குறைக்க வேண்டும்.

330,000 பேர் முதலாம் வகுப்புக்குச் சென்றால் அவர்கள் அனைவரும் தங்கள் பாடசாலைக் கல்வியை முடிக்க வேண்டும்.

கல்வி முறை பிள்ளைகளுக்கு சுமையாக உள்ளது. தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கப் பெற்றோர்கள் பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். பிள்ளைகள் வளரும் போது அவர்களும் அதையே செய்கிறார்கள்.

பொதுவாக ஒருவர் தனது வாழ்நாளில் 25 முதல் 28 வருடங்கள் வரை படிப்பதற்காக செலவிடுகிறார்.

எனவே படிப்பை முடிக்க செலவிடும் நேரத்தை குறைக்க வேண்டும்.

ஒரு மாணவர் ஒகஸ்ட் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்யும் போது, நான்கு மாதங்களுக்குப் பின்னர் டிசெம்பர் மாதத்தில் பெறுபேறுகள் வெளியாகும். பல்கலைக்கழக அனுமதிக்கு மேலும் ஒன்றரை வருடங்கள் ஆகும். லண்டன் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும்-என்றார். (அ)

# இணையவழி குற்றச்செயல் இலங்கையில் அதிகரிப்பு!




கொழும்பு, மார்ச் 01

நாட்டில் இணையவழியூடான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறுகின்ற மோசடிகளால் 30 - 40 வயதுக்கு இடைப்பட்ட பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு இணையவழி குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் கணனி குற்ற விசாரணைப்பிரிவு தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதோடு, அவை தொடர்பில் முறைப்பாடளிப்பதற்கு இரு பிரத்தியேக மின்னஞ்சல் முகவரியை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு மார்ச்சில் கணனி குற்ற விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பிரிவிற்கு கடந்த ஆண்டில் மாத்திரம் 2500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன, எனினும் தற்போது நிலைமை அதனை விட அதிகரித்துள்ளது.

நாளாந்தம் சுமார் 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன, இலங்கையில் இடம்பெறும் இணைய குற்றங்களில் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். பெண்களின் புகைப்படங்களில் அவர்களின் முகத்தோடு வேறு நிர்வாண உடல் புகைப்படத்தை இணைத்து இணையத்தில் வெளியிடுகின்றமை தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. (அ)

# மற்றுமொரு வழக்கிலிருந்து பஸில் ராஜபக்ஷ விடுதலை

கொழும்பு, மார்ச் 01

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக அரச நிதியை முறைக்கேடாக பயன்படுத்தியமைக்கு எதிராக கடுவலை நீதவான் நீதிமன்றில் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அமைச்சர் பஸில் அதில் இருந்து விடுவிக்கப்பட்டார். (அ)

# கிளிநொச்சி கால்வாய்க்குள் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மார்ச் 01

கிளிநொச்சி ஏ-9 வீதியின் கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று மதியம் ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த வீதியின் அருகில் உள்ள கால்வாயில் ஆணொருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் எவ்வாறு உயிரிழந்தார் என்பது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# திரிபோஷாவும் இல்லை

கொழும்பு, பெப். 01

சிசுக்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் களஞ்சியசாலைகளில் தற்போது திரிபோஷா இல்லை என குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே, கிளினிக்குகளுக்கு வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்கப்படமாட்டாது என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திரிபோஷா உற்பத்திக்கான சோளத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தால் கைக்குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திரிபோஷா வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தினந்தோறும் திரிபோஷா உற்பத்திக்கு சுமார் 70 மெற்றிக் தொன் சோளம் தேவைப்படுகிறது.

தேவையான அளவு மக்காசோளத்தை பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால், சோளத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்த போதிலும், அதுவும் முடங்கியுள்ளது.

மேலும், திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான பால் மாவைப் போதுமான அளவு பெற முடியாதுள்ளது-என்றார். (அ)




# ஆசிரியர் மரணத்துக்கு நீதி கோரி தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, மார்ச் 01

தலவாக்கலையில் கடந்த 23 ஆம் திகதி மரக்கிளை முறிந்து விழுந்ததால் பலியான ஆசிரியருக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும், பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி சம்பவம் நடைபெற்ற அதே இடத்தில் நேற்று கவனயீர்ப்பு போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் லோகி தோட்ட மக்கள், சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பித்த அமைதியான ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆசிரியருக்கு நீதி கிடைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய முறையில் நட்டஈடு பெற்றுக் கொடுக்கவேண்டும், தனியார் வசம் இருக்கும் கோவில் அரசுடைமையாக்கப்படவேண்டும், பொறுப்புகளை தட்டிக் கழித்த சகல அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிலைப் படுத்தும் வகையிலான பதாகைகளை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 200 வருட கால பழமை வாய்ந்த ஆலமரத்தை வெட்டுவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி மற்றும் உரிய முறையில் முறையான பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தாமல் அலட்சியமாக செயற்பட்ட பலரையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆசிரியரின் ஆத்ம சாந்திக்காக மெழுகுவர்த்தி ஏந்தி பிரார்த்தனை செய்தனர். மேலும் ஆசிரியருக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஜனாதிபதி உட்பட அரச அதிகாரிகளுக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்று கையொப்பம் இடும் நிகழ்வும் நடைபெற்றது. (அ)

# திறந்து வைக்கப்படாத குடிதண்ணீர்த் திட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 01

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள விசுவமடு பொதுச் சந்தையில் 2021 ஆம் ஆண்டு வட மாகாண சபையின் நிதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் நீண்ட காலமாக திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

விசுவமடு பொதுச் சந்தையின் குடிதண்ணீர் தேவையினை பூர்த்தி செய்துகொள்வதற்கு 1.5 மில்லியன் ரூபா செலவில் குறித்த குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கப்பட்டது.

தற்போதும் சந்தை வணிகர்கள் குடிதண்ணீரை பெற்றுக் கொள்வதில் பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இந்நிலையில் கட்டப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை விரைவில் திறந்துவைக்க வேண்டும் என்றும் வணிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## தடுப்பூசி...

நேற்று இடம்பெற்றது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் 11ஆம், 12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில் தற்போதுள்ள கொரோனா இடர் நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து 100 பேரை மாத்திரமே கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்துக்கு அனுமதிப்பது என வெளிவிவகார அமைச்சு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

எதிர்வரும் 11ஆம், 12 ஆம் திகதிகளில் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் உற்சவம் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

(அ-03)

## அடையாள...

இடையிலான கலந்துரையாடலிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

கடந்த ஆட்சியில் இழுவைமடி வலை தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் கடற்றொழிலாளர்களின் எதிர்ப்புக் காரணமாக நாரா நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், எமது கடல் வளத்தை பாதிக்காத வகையில் இழுவைமடி வலையைப் பயன்படுத்துவது தொடர்பாக பொருத்தமான சட்ட திருந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது வரையில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் தமது செயல்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

இதேபோன்று, கற்பிட்டி பிரதேசத்தில் இழுவைமடி வலையை பயன்படுத்துவதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால், அந்தப் பிரதேசத்தில் குறித்த தொழில் முறையை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து ரையாடி பொருத்தமான தீர்வு வழங் கப்படும்" என்றார். (ஐ)

## தமிழ்த்...

தலைவர் கி. சேயோன் ஆகியோர் சந்தித்துப் பேசினர் என்று கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஹசன் அலியின் நிந்தவூர் இல் லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றி ருந்தது.

இதன்போது, உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லிம்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் களமிறக்கு வது என்றும் தொடர்ந்து, பாராளு மன்ற தேர்தலிலும் முஸ்லிம் தரப்பி னருக்கு ஆசனங்கள் ஒதுக்குவது என்றும் இணக்கம் காணப்பட்ட தாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே, முஸ்லிம் தரப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இணைத்து தேர்தலை சந்திப்பது குறித்து இரா. சாணக்கியனின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முஸ்லிம் தரப்பை இணைக்கும் விட யத்துக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட பிரமுகர் கள் பலர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்ளூர்...

ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூர் இழுவைமடிப் படகுகள் தடை செய்யப்படுமாக இருந்தால், அதனை நம்பியுள்ள மீனவக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (அ)

## புலம்பெயர்...

- தொடர்ச்சியாக 40 ஆண்டுகளுக்கு பின்னர் எதிர்த்து குரல் எழுப்பியிருக்கின்றோம். இவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக முன்னெடுத்திருக்கின்றோம்.

நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது எங்கள் நிலம், நாங்கள் எங்களை ஆழ வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்கவேண்டும். அது இருக்கிறதா? ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருள் அடிப்படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங்களவர்களை குடியேற்றுவது, அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்றன- என்றார். (அ)

## பயங்கரவாத...

போராட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பற்றி தமிழ் சமூகத்திற்கு எவரும் எதுவும் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. இந்த சட்டத்தின் கீழ் கூடுதலாக கஸ்டங்களை அனுபவித்தவர்கள் தமிழ் மக்கள். சிங்கள இளைஞர்களும் 1988, 89 ஆம் ஆண்டுகளில் இந்த சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

பயங்கரவாத சட்டம் போன்று உலகத்தில் எங்கும் இவ்வாறான சட்டம் இல்லை.இவ்வாறான சட்ட திருத்தங்களையே கொண்டுவருகின்றார்கள். அதனால்தான் இந்த திருத்தம் கண் துடைப்புக்கூட கிடையாது என நாங்கள் கூறியுள்ளோம்.

பலர் எங்களிடம் கடந்த ஆட்சிக் காலத்தில் இதனை நீக்கக்கூடிய காலம் இருந்தது ஏன் நீங்கள் அதனை செய்யவில்லையென கேட்கின்றனர். அவ்வாறு கேட்கின்றவர்களுக்கு ஞாபகமறதி அதிகம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக ஒழித்து சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப பயங்கரவாத தடுப்புச்சட்டம் பாராளுமன்றில் கொண்டுவரப்பட்டது. அரசியலமைப்புக்கு எதிரான புரட்சி காரணமாக இந்த நாடு ஸ்திரமற்ற தன்மைக்குச் சென்றுவிட்டது.அரசாங்கத்திற்கு அங்கு பெரும்பான்மையும் இருக்கவில்லை. அதனை தொடர்ந்து ஈஸ்டர் தாக்கு தல் நடைபெற்றவுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கினால் எங்களால் தாக்குதலை தடுக்க முடியாது என பாது காப்புத் தரப்பினர் கோஷத்தை எழுப்பி, கடுமையான சட்டமும் கடுமையான ஆட்சியாளர்களும் வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பித்தான் அந்த சட்ட மூலம் நிறைவேற்றப்படாலும் கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் நடைபெற்றது. இந்த சரித்திரம் தெரியாதவர்கள் இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள்.

தற்போதுள்ள அரசும் இதற்கு முன்பிருந்த அரசுகளும் இந்த சட்டத்தை நீக்குவோம் என்று சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்துள்ளனர்.அந்த வாக்குறுதி 2017ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டது.அது செய்யப்படவில்லையென்ற காரணத்தினால் ஐரோப்பிய ஒன்றியம் ஜிபிஎஸ் சலுகையினை வழங்குவதா இல்லையான என ஆராய்ந்து வருகின்றது. இந்த காலகட்டத்தில் நாங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கடுமையான அழுத்தத்தை கொடுக்கின்றோம். - என்றார்.

(அ)

## பொதுசன...

வலியுறுத்தியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

2009 இல் முடிவடைந்த போரின் போது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமல் தொடர்ந்து இருந்தது மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுக்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தது. இதனால், நீதி ஸ்தம்பித்து, தண்டனையின்மை நீடித்தது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பலர் இலங்கை அதிகாரிகளால் அதிகளவில் அச்சுறுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டனர்.

இலங்கையின் சட்ட அமலாக்க அதிகாரிகளால் கோவிட்-19 கட்டுப்பாடுகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களின் அதிகரித்த பயன்பாடு அமைதியான போராட்டங்களுக்கான சந்தர்ப்பங்களை கட்டுப்படுத்துகிறது. அதேநேரத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படுவது தொடர்கிறது. "அபிவிருத்தித் திட்டங்கள்" என்ற போர்வையில், மக்கள் தொகையை மாற்றவும், வடகிழக்கு தமிழ் பேசும் பகுதிகளின் தொடர்பை சீர்குலைக்கவும், தமிழ் மக்களுக்கு அவர்களின் நிலங்கள் அணுகலை மறுக்கவும், அரசாங்கத்தால் இயக்கப்படும் சிங்கள - பௌத்த குடியிருப்புக்கள் (குடியேற்றங்கள்) பாரம்பரிய தமிழர் பகுதிகளில் வளர்ந்து வருகின்றன.

மகாவலி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம், வன திணைக்களம் மற்றும் வனவிலங்கு திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் இந்த முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏறக்குறைய சிங்கள - பௌத்த நபர்களை உள்ளடக்கிய இலங்கை இராணுவத்தின் பெருமளவிலான பிரசன்னத்தினால் இந்த அத்துமீறல் எளிதாக்கப்படுகிறது.

தற்போதைய இனவாத அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களின் சனத்தொகை நிலையை சீர்குலைத்து, தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களுக்குள் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் குறியாக உள்ளது. சிங்கள - பௌத்தர்களை கொண்ட பிரதேசங்களை தமிழ் மாவட்டங்களில் இணைத்து, அதன் மூலம் தமிழ் பிரதேசங்களில் சிங்கள - பௌத்த சனத்தொகையை அதிகரிக்கும் வகையில் பிரதேச எல்லைகளை வரையறுக்கும் வேலைத்திட்டத்தில் இலங்கை அரசாங்கமும் ஈடுபட்டு வருகின்றது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள் தமது வாழ்வில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் பெப்ரவரி 2017 இல், தமிழ்ப் பெண்கள் "பாலியல் அடிமைகளாக" அடைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவ "வன்புணர்வு முகாம்கள்" பற்றிய விவரங்களை ஐ. நாவிடம் ஒப்படைத்தது.

குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயல் குழு 2020 ஆம் ஆண்டில் உலகில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் இலங்கையில் இருந்து வருவதாகக் கூறியது. தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பிற அரசாங்க புலனாய்வு அமைப்புகளால் துன்புறுத்தப்படுகின்றனர் மற்றும் அச்சுறுத்தப்படுகின்றனர். இந்த குடும்பங்களின் அமைதியான போராட்டங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பல முறையீடுகள் மற்றும் தீர்மானங்கள் இருந்தபோதிலும், இலங்கை தொடர்ந்து கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகிறது. பல தமிழ் அரசியல் கைதிகள் குற்றஞ் சாட்டப்படாமலோ அல்லது விசாரணையின்றி வருடக்கணக்காக சிறையில் அடைக்கப்பட்டும் அல்லது நியாயமற்ற விசாரணைகளின் பின்னர் தண்டனை பெற்ற போதும், இலங்கைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் கூட தமிழர்களுக்கு எதிரான அட்டூழியக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்படவில்லை அல்லது குற்றம் சாட்டப்படவில்லை.

இலங்கையில் நீடித்து வரும் நெறிமுறை முரண்பாட்டிற்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காமையின் காரணமாகவே தமிழர்கள் மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்பட்டு வருவது இனப்படுகொலைக்கு சமம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனப்பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய அட்டூழியங்களை நிறுத்துவதற்கும் சர்வதேச அளவில் நடத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்றே ஒரே வழி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் பிரதேசங்களில் அரச அனுசரணையுடன் சிங்கள பௌத்த குடியேற்றங்களை நிறுத்துவதற்கும், சிங்கள - பௌத்த பிரதேசங்களை தமிழ் மாவட்டங்களுக்குள் இணைத்து பிரதேச எல்லைகளை நிர்ணயிப்பதை நிறுத்துவதற்கும், போர் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையில் தமிழர் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தின் அபரிமிதமான பிரசன்னத்தை குறைப்பதற்கும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்கொடுமை குற்றங்களை தடுப்பதற்கு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## மனித...

அறிக்கையின் முதற்பிரதி வெளியானது. இது தொடர்பில் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல், புதிய அரசமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விபரீதம் உள்ளிட்ட தமிழர் நலன்சார் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிற்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் அறிக்கை மூலம் வெளியிடுவோம்" - என்றார். (ஐ)

## தொற்றுக்கு...

30-59 வயதுக்கு இடைப்பட்ட 5 ஆண்களும், பெண் ஒருவருமாக 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 11 ஆண்களும், 13 பெண்களுமாக 24 பேரும் உயிரிழந்தனர். இதனால், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 222ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu







# நாட்டை உயர்த்தும் திறன் அரசாங்கத்துக்கு இல்லை

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 01

நாட்டை ஆள்வதற்குத் தேவையான அனைத்து அதிகாரங்களையும் பொதுமக்கள் அரசாங்கத்துக்கு வழங்கியபோதிலும், நாட்டை உயர்த்தும் திறன் தற்போதைய நிர்வாகத்துக்கு இல்லை என எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

காலியில் உள்ள ஆமைகள் பாதுகாப்பு மையத்துக்கு கண்காணிப்புச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் விளைவாக சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதங்களை அரசாங்கம் சரியாக மதிப்பிடுவ



தற்கும் இதுவரை இழப்பீடுகளை மதிப்பிடுவதற்கும் தவறிவிட்டது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தத்தின் விளைவாக ஏற்பட்ட சுற்றாடல் அழிவுக்கு காரணமானவர்களை தண்டிக்க அரசாங்கம் பலவீனமாக இருப்பதாகவும், மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு கோருவதற்கும் அரசாங்கம் பலவீனமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

டொலர் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கத்தினால் தீர்வுகளை வழங்க முடியாது. எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கத்தால் முடியவில்லை எனவும், நாட்டுக்கு வழங்கவேண்டிய இழப்பீடுகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடும் முறை குறித்து அரசாங்கம் அறிந்திருக்கவில்லை என அவர் மேலும் கூறினார். (அ)

# ஒட்டுசுட்டான் தான்றோன்றீஸ்வரர் ஆலயத்தில் வடக்கு மாகாணத்தின் மஹா சிவராத்திரி விழா

முல்லைத்தீவு, மார்ச் 01

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் மற்றும் இந்து கலாசாரத் திணைக்களம் ஆகியன ஒட்டுசுட்டான் தான்றோன்றீஸ்வரர் ஆலய முகாமைத்து சபையுடன் ஒன்றிணைந்து நடாத்தும் வடமாகாண மஹா சிவராத்திரி விழா இன்று செவ்வாய்க்கிழமை ஆலய முன்றலில் மாலை 7.00மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே. விமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ப.ஜெயராணி கௌரவ விருந்தினராகவும், ஒட்டுசுட்டான் தான்றோன்றீஸ்வரர் ஆலய முகாமைத்தவ சபைத் தலைவர் சி.கணேசபிள்ளை இனிய நல் விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் விழாவில் ஆலய பூஜை வழிபாடு, கலைநிகழ்வுகள், சிறப்புரைகள், ஆன்மீக இசைச்சங்கமம், கௌரவிப்பு நிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜெனிவாவில் இலங்கையரை சந்தித்து பேசியது பீரிஸ் குழு

கொழும்பு, மார்ச் 01

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமண ஆகியோர், குளோபல் ஸ்ரீலங்கா மன்றம் மற்றும் ஐரோப்பாவிலுள்ள இலங்கை அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசியுள்ளனர்.

ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்துக்கு முன்னதாக இந்த சந்திப்பு இடம்பெற்றதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இதன்போது, குறித்த சந்திப்பில் இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

எரிபொருள் தட்டுப்பாடு;

# பஸ்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு முடிவு

கொழும்பு, மார்ச் 01

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, நேற்று திங்கட்கிழமை முதல் இயக்கப்படும் பஸ்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்தார். இதற்கமைய நேற்று பகலில் இயக்கப்படும் பஸ்க ளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நேற்றிலிருந்து மேலும் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)



# புலிகளின் கரும்புலி தாக்குதல் படகு சுண்டிக்குளத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 01

மருதங்கேணிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில் கடலில் மறைத்து வைக்கப்பட்ட தமிழீழ விடுதலை புலிகளின் கடற்புலிகளது கரும்புலித் தாக்குதல் படகு ஒன்று நேற்று திங்கட்கிழமை இராணுவத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இந்த படகு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட படகு வெட்டி சோதனையிடப்பட்டபோது படகில் தற்கொலை தாக்குதலுக்கான வெடிபொருட்கள் நிரப்பப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. (அ)

# மரண அறிவித்தல்



பிறப்பு 11 - 12 - 1933

இறப்பு 25 - 02 - 2022

## திருமதி லூட்ஸ்மேரி கபிரியேல்பிள்ளை (ஜெயசீலி)

யாழ். பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட லூட்ஸ்மேரி கபிரியேல் பிள்ளை கடந்த 25-02-2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை, – இராசேந்திரம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கருணாகரன் – மரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும்,காலஞ்சென்றவர்களான சின்னராணி, நமோமரியும் திருச்செல்வம், பனான்டோ, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மரியதாசன், பூமணி, யூகலிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும்,றோய், டனி, ஷாமளா, காலஞ்சென்ற நிமோ, பிறேமி, கபில் ஆகியோரின் அன்புத் தாயாரும்,சந்திரா, மாலினி, றஞ்சன், நவீனன், யாழினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,சிலோயினி, பிரங்கி, நிவேதி, எமிலின், மெலானி, றொனான், அதிரியான், ஸ்ரெவானி, நொயமி, றொமின், சுயீவன், சுவேத்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
றோய் - மகன்
Mobile : +33782558913
டனி - மகன்
Mobile : +33651045222
ஷாமளா - மகள்
Mobile : +33698624109
பிறேமி - மகள்
Mobile : +33781191911
கபில் - மகன்
Mobile : +33651922888

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நாடோடிகள், ஜெயம் கொண்டான் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்



**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : **BLACK AND WHITE**

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரபெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு